# திராவிடன்

**சந்தா விளம்பரம்.**

தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு ரூ. 1-00
தபாற்செலவு உட்பட " " ரூ. 1 25
மலாய்நாட்டிற்கு " " ரூ. 2-50
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

# THE DRAVIDAN.

**A Monthly Newspaper.**

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணிகலம்."

**விளம்பர விகிதம்.**

| | |
|---|---|
| 1 கலம் முதன்முறை | ரூ. 4 50 |
| ¾ " " | ரூ. 3 00 |
| ½ " " | ரூ. 2 50 |
| ¼ " " | ரூ. 1 50 |

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும்

புத்தகம்—1. { யாழ்ப்பாணம்—சுன்னுகம்:—அக்ஷயஹு மாசிமீ உகூ (1927 மார்ச்சு 12) சனிக்கிழமை. } இலக்கம்—2.


உ

கடவுள் துணை.

அங்கிங்கெனுநபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெல்லாந்
தந்தெய்வமெந்தெய்வமென
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்துவாம்.

## யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம் சுன்னுகம்.

தை மூ 13ந் உ கூடிய மீட்டிங்கில் கனம்பொருந்திய தலைவர் சபாநாயகராயமர்ந்தார். நிர்வாகசபை அங்கத்தவர்கள் அநேகர்சமுகத்தில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள் முதலாவதாக, சகலருக்கும் வசதியாயிருக்கும் மூத்தியாங் கூடல் என்னுங்காணியில் ஆங்கிலமும் தமிழும் படிக்கக்கூடிய கலவன் பாடசாலை யொன்று ஏற்படுத்துவதாகவும் மேற்படி சங்கத்தின் நிர்வாக அங்கத்தவர்களிடம் மாசம், ஒன்றுக்கு ரூபா 1-ம் பள்ளிக்கூடஉதவிக்கு 5 ரூபாவும் கொடுத்துதவும்படி தீர்மானிக்கப்பட்டது.

மாசி மூ 16-ந் உ கூடிய மீட்டிங்கில் கனம் பொருந்திய தலைவர் சபாநாயகராகவும். நிர்வாகசபை அங்கத்தவர்கள் சமுகமாகவும் பேசியதாவது. ஸ்ரீ பிரபவ ஹு சித்திரை மூ முன்வரும் சுபதினத்தில் ஷெ பள்ளிக்கூட அஸ்திவாரக்கல் நாட்டுவதும் ஷெ சங்கத்திற்குத் தேவையான சில புத்தகங்கட்கு யாழ்பாணம். திரு. சைவபரிபாலன சபையாரிடம் கேட்டுப்பெற்றுக் கொள்வதெனவும் அடுத்தமீட்டிங்குகள் மாசமொருமுறை ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது

மேற்படிசங்கத்தின் புதிய அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்கள்.

ஸ்ரீ. வ. கனகசேகரன், விஷவயித்தியன், ஏழாலை
" ம. சே தம்பிமுத்து, வியாபாரி, பலாலி.
" சின்னர், மயிலிட்டி
" கோ. குருநாதி, தெல்லிப்பளை.
" பூ. மு. ஆசீர்பாதம், தெல்லிப்பளை
" காங்கேசன்துறை.

சட்டம்பியார் இராமர். மு. நாகர். மு பொன்னர். வ. பிள்ளையர். வ. வேலு. இ. ஐயங்கன். கா. வயிரவியான், நா. தம்பு, க. கிருஷ்ணர், க. செல்லர், கா கணபதி, ஐ கந்தர், கு. பூதர் ப. தம்பர், ஐ ஆறுமுகம், இ. கோணர், த தந்தர், ஐ வன்னியன், ச. வேலு, மு தவசி, ப. வல்லி, வே முருகன், வ. சின்னர், வ. வயித்தி, பு. குஞ்சன், க. நாகமுத்து, வே சின்னவன், மு கந்தர், இ. கந்தர், வ தில்லையர், சி. வேலர், க கறுப்பர், மு வயிரவியான், இ நாகமுத்து, க. மாணிக்கம்.

## கடவுளுக்கு ஓர் விண்ணப்பம்.

எல்லாம் வல்ல. இறையவர்க்கரசே, கருணையங்கடலே! உயிர்களினுடைய உள்ளக்கமலத்தில் நீர் சாட்சிமாத்திரமாய் நின்று அவ்வுயிர்கள், வினையின்வசத்தால் பெறும் இன்ப துன்பங்களை அவ்வுயிர்களோடு கூடவிருந்து நுகர்கின்றனை உயிருக்குயிராயிருந்து அவைகளோடு பிறந்திறந்து உழலுகின்றனையே, எம் பங்காளா! ஏழுவகைத் தோற்றத்துள்ளும். கர்மத்திற்கு உரிமையுடைய மக்கள் தோற்றத்தின் அழுவாக மிகவும் வெளிப்பட்டு நிற்கின்றனையே அவற்றுள்ளும் ஏழைபங்காளனும் ஆபத்பாந்துவாயு மிருக்கின்றனையே, ஏழைகளாயும் கல்வியறிவு கொஞ்சங் கூட இல்லாது செல்வம் முதலியவற்றில் முன்னேற்றமடையாது. மிகவும் நெருக்கப்பட்டும் தாழ்த்தப்பட்டும் நடத்திவரும் நமமக்களின் ஆபத்பந்துவாகிய, உமக்கும் எங்கள் கூட்டத்தார்க்கும் மிகவும் ஒற்றுமையும் சம்பந்தமும் உண்டென்பது தெய்வத்தின்திருவுளமே அறியும். தேவரீர் சிவசாட்சியாக, நின்று படும் வாதையினின்றும் விடுவிக்கவோ! எங்களைத் துன்பத்தினின்றும் மீட்கவோ? எங்களையும் மக்களென வறியும்படி அறிவுக்கறிவாய் நின்று விளக்கியதோடு, உமது பத்துக்களாகியும் உமது வடிவமதாகியும் உமது அருளிற்கு பாத்திரமாகியுமுள்ளநம்மக்களின் உணர்ச்சியை விளக்குவதற்கு நம்தாழ்த்தப் பட்டவர்களை தோன்றச் செய்தனையே. உன்செயலன்றி ஓர் அணுவும் அசையாதென்பது ஆப்தர் வாக்கியமன்றே? உம்மால் தோன்றுவிக்கப் பட்ட, மக்களாகிய தாழ்த்தப் பட்டவர்களை பூரணசந்திரனைப்போல் வளரச்செய்துபயன் படுமாறு செய்வது உமக்கேகடன் என்பதை. உமதருள், மார்க்கத்தின்படி விண்ணப்பிக்கிறேம் அப்பா; அம்மையே! ஒப்பிலாமணியே அன்பில்விளைந்த தயாநிதி! வாரமுதே, கண்ணனுராய்

இலங்கை நாட்டின் பிரபுக்களாகிய! தேசபக்தர்களுக்கு, கனந்தங்கிய தேசபக்தியுடைய மகான்களே! கண்ணியம் நிறைந்த பெரியோர்களே! தயைகூர்ந்து' கவனியுங்கள் உலகமனைத்திற்கும் எவ்வாறு நன்மைசெய்வது? நம்தாழ்த்தப்பட்டவரின் நன்மைக்குத் தடையாகவுள்ளது யாது? அதனைஎவ்வாறு நிவர்த்திப்பது? என ஆராய்ந்து அறத்திற்கு மனச்சாட்சிதூண்டும் வண்ணம் தவறது உயிர்களனைத்திற்கும் நன்மை செய்தலாம். அதனிலும், வறியார்க்கொன்றீதலே ஈகைமற்றெல்லாம் குறி யெதிர்ப்பை நீர் துடைத்து, என தெய்வப்புலவர் கூறியவண்ணம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு நன்மை செய்தலே முக்கியமானதேசபக்தியாம். ஆகவே, ?துவரையில்தாழ்த்தப்பட்டவர்களுக்காய் என்ன நன்மை செய்தீர்கள்? நல்லது செய்தலோம்புமின் என்பதற்கிணங்க தேசபக்திக்கு இடமாகிய தாழ்த்தப்பட்டவரின் முன்னேற்றத்திற்கு, தடையாயுள்ள வித்தியாசத்தை ஒழித்து கல்விமுதலியவற்றல் முன்னுக்கு கொண்டுவரமுயன்றீர்களா? இவ்வாறு நம் சகோதரரின் தடையானவைகளை முன்னரே ஒழித்து கல்விமுதலியவற்றை போதித்திருந்தால் இத்தேசத்தில் சகோதர ஒற்றுமையும் சத்தியநெறியும் தேசபக்தியும், இப்பொழுது தழைத்து ஓங்குமன்றே! இவ்வாறு ஒருவகுப்பினரை, கீழ் நிலைமையில் விட்டு எத்துணை பாடுபட்டாலும். வெளிச்சமே தேசபக்தியாதுமென கொள்வதற்கிடமில்லை. கயிலாய பூமிக்கு போகவிரும்பிய ஒருவன் மேற்குத் திசையை நோக்கிச்செல்வதை ஒக்கும், அதலான் நம் தாழ்த்தப்பட்டவரை முன்னுக்கு கொண்டுவரும் வழியைத் தேடும்படி வேண்டிக்கொள்ளுகிறேம் இதுசமையம், நம் காருண்ணியம் நிறைந்த அரசாங்கத்தின் உதவியையும் நன்மையையும் பன்முறையும் பரிந்து கேட்க்கின்றேம். உத்தமமான தேசாபிமானிகளும், தற்போது மக்களுக்காய் உழைப்பதற்கென முன்வந்திருக்கிறர்கள்.

## உயிர்ப்பலியை நிறுத்துங்கள்.

உயிர்ப்பலியை நிறுத்துங்கள்? ஏழைப்பிராணிகளாகிய ஆடு கோழி களிடத்து இரக்கங் காட்டுங்கள்? சிறு தெய்வங்கள். இறந்தவர்கள் ஆகியவர்களின் பொருட்டாவது வேறு எக்காரணத்தை முன்னிட்டாவது உயிர்ப் பிராணிகளைக் கொல்லாதீர்கள். உலகிலுள்ள எல்லா உயிர்களையும் படைத்துப் பரிபாலிப்பவர் கடவுளேயாவர் ஆதலால் அவர் பெயரால் சமயச் சார்பில் உயிர்க்கொலை புரிவது பெரும்பாவமாகும் கடவுளின் அருமைப் பிள்ளையாகியஎளிய உயிர்ப் பிராணிகளைக் கோயில் வாயிலில் அறுத்து இரத்தத்தைச் சொரிவது எவ்வளவு கொடுமையாகும். பிள்ளையைப் பெற்றோர் முன்னர் வெட்டி வீழ்த்தினுல் அவர் பொறுப்பரோ கொலை புரிவோரைக் கடவுள் சும்மா விடுவாரா. உயிர்ப்பலி யிடுவதால் தெய்வங்கள் திருப்தியடையும் என்று எண்ணுவது பேதமையேயாகும். நம்மைப்போல் தெய்வங்கட்குச் சரீரம் பசிதாகம் நோய் ஆகியவை இல்லை. நமது அன்பை வெளிப்படுத்திக் காட்டுதற்கும், மரியாதையின் பொருட்டுமே நாம் தேங்காய் பழம் அன்னம் ஆகியவற்றை நைவேதனஞ் செய்கின்றேம் இத்தகையசுத்த ஆராதனையே மிக உயர்ந்ததாகும். கள்ளும் ஊனும் வைத்துப் படைப்பது மிகமிகக் கீழான அசுத்த ஆராதனையேயாகும். நல்லறிவுடையோராகிய நாம் உயிர்ப்பலியிடும் தீய வழிபாட்டை அறவேவிடுத்து, பாற்பொங்கல் மாவிளக்கு தேங்காய் பழம் இளநீர் பானகம் ஆகியவைகளைக் கொண்டு செய்யும் நல்வழிபாட்டையே மேற்கொண்டு இன்ப வாழ்வு வாழ்தல் வேண்டும் உயிர்ப்பலியிடும் கொடிய அநாகரிக வழக்கத்தை விடுதற்கு ஒருவரும் அஞ்சவேண்டாம். உயிர்ப்பலியிடுவதற்கே அஞ்சுதல் வேண்டும். உயிர்களிடத்து இரக்கங் கொள்வோரையே கடவுள் பெரிதும் நல்வாழ்வு அடையும்படி செய்வார். உயிர்ப்பலியிடா விட்டால் சுவாமி குறைவரும் என்பது தவறேயாகும், பலியிடப் பெற்ற பிராணியின் உடல் சுவாமிக்குப் பயன் படுவதில்லை எல்லாம் நமது வயிற்றுப் பெருமானுக்கே அர்ப்பணம் ஆகின்றது. உயிருடன் ஆடு கோழிகளைக் கோயிலில் அடைத்து வைத்தால் சுவாமி ஒருநாளும் அவைகளை அடித்துத் தின்னுது ஆதலால் அன்பர்களே உயிர்ப்பலியை நிறுத்துங்கள்! ஏழைப் பிராணிகளைக் காப்பாற்றுங்கள்!! சுத்த ஆராதனை செய்து சுகம் பெறுங்கள்.

## இளவரசரும் முதிய மனைவியும்.

பிரான்ஸ் தேசத்தின் தலைநகரான பாரீஸ் நகரத்தில் வசிக்கும் ருஷ்யா ராசவம்சத்தைச் சேர்ந்த பிரின் கலிட்சைன என்பவர்மீது அவர் மனைவி கலியாணத்தை ரத்துசெய்யும்படி ஒருவழக்குத்தொடுத்திருக்கிருள் இம்மாதிற்கு இன்னும் அறுபதுவயது ஆகவில்லை அதற்கு இன்னும் நான்குவருஷங்கள் நடக்கவேண்டும். இதற்குமுன் நான்குதடவை இம்மாது கல்யாண வைபவத்தைக் கண்டிருக்கிருள். இப்போது வேண்டாமென்று விவாதிப்பது ஐந்தாவதாய் நடந்த விவாகம். இந்தக்கணவனை வரித்து ஒன்றரை வருஷம் ஆகின்றது இம் முதிய மனைவியை மணக்கும்போது இளவரசருக்கு வயது இருபத்தேழு நடந்தது. மனைவியின் வயதிற் பாதிக்குச்சரி வயதுள்ள கணவனுகவே வாய்ந்தார். இம்மாது கலிபோர்னியாவிலுள்ள ஒரு கோடீசுபனுடைய புத்திரி. அப்போது ஐமீடுரோக்கர் என்று இவளுக்குப் பெயர். இவளது இளம்பருவத்தில் முன்னிட்ட கணவர்களுடன் கிழக்குத்தேசங்களில் நெடுந்தூரம் அலைந்துதிரிந்து ஐரோப்பாவில் அகப்பட்டமட்டும் சித்தார்த்தரது திருஉருவச் சிலைகளைச் சேகரித்து அருமையாய்ப் போற்றிவந்தாள் கடைசியாய் 200 சிலை உருவங்களைச் சேர்த்து அனைத்தையும் தன்னுடைய சயனக்கிருகத்தில் அழகுபெற அமைத்து அதை ஒரு அற்புதப் புத்தராலயமாக்கி விட்டாள். இன்னெரு அறையில் கௌதமருடைய திருவுருவங்களை ஸ்தாபித்து இவளும் இவளுடை சீனத்து வேலையாட்களும் வந்தனை வழிபாடுகளைச் செய்துவந்தனர்

அறிமுகமான எவரையும் இந்த அறையில் தான் வரவேற்பது வழக்கம் இவற்றைத் தவிர இவளது மாளிகையில் நீராடுவதற்கென்று ஒரு மண்டபம் கண்களைக் கவரும்படி அதிவிநோதமாயமைத்துப் பலவித சித்திரங்களாலும் புகைப்படங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது இவ்வறையில் அழகிய ஆண்மக்களின் புகைப்படங்களை 500-க்குமேல் அமைத்திருந்தாள். அவற்றில் இம்மாதிரிப் படங்கள் முன்னிட்ட நான்கு புருஷர்களின் புகைப்படங்களும் இருந்தன. இப்போது இம்மாதுக்கு 5-வது கணவனுய் வாய்ந்திருக்கும் அரசகுமாரனை இத்தியாதி வைபவங்களமைந்த மாளிகைக்கு அழைத்துவந்து விட்டாள். அவருக்கு முதலில் மாளிகை அலங்காரமாகவே புலப்பட்டது ஆனுல் சயனக்கிருகத்தில் கௌதம புத்தர்கள் அத்தனைபேர் இருப்பதும் அவ்வுருவங்களின் கண் விழிகளாய்ப் பதிக்கப்பட்டிருக்கும் நவரத்தின மணிகள் விளக்கு வெளிச்சத்தில் பிரகாசிப்பதும் இவருக்குப் பிடிக்கவில்லை. அத்தனை உருவங்களும் ஒளி பொருந்திய கண்களால் உற்று நோக்கிக் கொண்டிருக்க உறக்கங் கொள்வது இவருக்குச் சாத்தியமில்லை. மற்றொரு அறையில் பிரமாண்ட உருவங்களாய் நிற்கும் கௌதமபுத்தர்களைத் தன்மனைவியும் சீனத்து வேலையாட்களும் பிரதிதினமும் அடிக்கடி தொழுது சாஸ்டாங்கமாய் நமஸ்கரிப்பதைக் கண்கொண்டுகாணப் பொறுக்கவில்லை. அந்த இரண்டு அறைகளுந்தான் இப்படியென்ருல்,

நீராடு மண்டபத்தின் அலங்காரம் இவருக்கு இன்னும் அதிகமாகவே அருவருப்புண்டாக்கிவிட்டது. இவருக்கு முன்னிருந்த நான்கு புருஷர்களின் உருவங்களும் அங்கேயிருக்கின்றன. அவர்களைப்பார்க்க இவருக்குப் பிரியமில்லை அந்த அறைக்குச் செல்வதையும் விட்டுவிட்டார். பிரதிதினமும் இத்தகையகாட்சிகளுக்கிடையே இருந்துவாழ்வது அவருக்கு மனோவேதனை உண்டாக்கக் கூடியமட்டும் பொறுத்துப் பார்த்தும் முடியாமல், கடைசியாய் இவற்றை எல்லாம் எடுத்துவிட வேண்டுமென்று ஆட்சேபித்தார் இந்த 200 புத்த உருவங்களுமிருந்து கொண்டு தன்னுடைய சகல காரியாதிகளையும் அவமாக்கி விடுகின்றன. இவற்றினிடம் ஏதோ ஒரு. கொடிய சக்தி இருக்கின்றதென்று வாதித்தார் ஆனுல் இம்மாது என்னுடைய இந்தப் புத்தர்களில் எவரும் எதிராளிகளல்ல அதை நான் நம்பவேமாட்டேன். அநேக நூற்றாண்டுகளாய்ப் பிரார்த்தனைகளைக் கேட்கும் ஒரு புத்தஉருவத்திற்கு ஒருவிதஆத்துமசக்தி உண்டாகிறதென்று நம்புகிறேன். ஆனுல் அதுயாருக்கும் கெடுதல் செய்கிறதென்பதைக் கண்டதில்லை என்று பதில் சொன்னுளாம். பின்னிட்டு இது விஷயமாய் இருவருக்கும் மனஸ்தாபம் வரவே ஐந்தாவது கணவனை விலக்குவதற்கு வியாச்சியம் தொடுத்துவிட்டாள். விசாரணை இன்னும் முடியவில்லை. இப்போது பாரிஸ் நகரத்தில் இம்மாதின் மாளிகைதான் எல்லாவற்றிலும் அதி உன்னதமாய் விளங்குகிறதாம்.

## கிளிப்பிள்ளைகளின் ஏகபத்தினி விரதம்.

கடவுளால் சிருட்டிக்கப்பட்ட எல்லா உயிர்ப்பிராணிகளுள்ளும் சிறந்தவனுக மனிதன் கருதப்படுகிறுன். இதற்கு மிருகங்கள் பட்சிகள் முதலியவற்றிற்கு உள்ள ஐந்து அறிவைவிடப் பகுத்தறிவு என்ற அம்சம் ஒன்று அவனுக்கு அதிகப்படியாக இருப்பதே காரணமெனப்படுகிறது. ஆனுல் இல்லறத்துறையில், கிளிகள், ஆறுஅறிவு படைத்ததாக மார்புதட்டிப் பேசிக்கொள்கின்ற மானிடர்களுக்கும் நல்லபாடங்கற்பிக்கக் கூடியனவாக இருக்கின்றன என்பது ரீகா சர்வகலாசாலையைச்சேர்ந்தடாக்டர் ஹில்டா சின்னட்டாமஸன் என்பவர் நடாத்திய பரிசைஷயால் தெரியவருகின்றது. டாக்டர் ஹில்டா ஒரு ஸ்திரி வைத்தியர் அவர் கிளிகளின் இல்லறவாழ்க்கையையும் ஆண்பெண்கிளிகள் ஒன்றுக்கொன்று விசுவாசமும் பற்றுதலுங் கொண்டு கற்புநெறி தவருமல் வாழ்வதையும் கண்டு கொள்ள ஒரு பரீக்ஷை நடத்தினர். அவர் முதலில் இரண்டு பெண்கிளிகளிருக்கு மொரு கூட்டில் ஓர் ஆண் கிளியை அடைத்துப்பார்த்தார். ஆண்கிளியானது கூச்சத்துடன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு பதுங்க ஆரம்பித்தது. ஆனுல் பெண் கிளிகள் தங்களுள் குரைச்சலிட்டுச் சச்சரவு செய்து கொண்டன. பிறகு அவர் ஒரு பெண் கிளியை இரண்டு ஆண்கிளிகளுடன் அடைத்து வேடிக்கைபார்த்தார் இம்முறை பெண்கிளி நாணிப் பதுங்க ஆரம்பித்தது. ஆனுல் இரண்டு ஆண்கிளிகளும் ஒன்றுக் கொன்று சண்டை செய்து வாலிலுள்ள இறகுகளைப் பிய்த்துக் கொண்டன. பிறகு டாக்டர் ஹில்டா ஒரு ஒரு ஆண்கிளியையும் ஒரு பெண்கிளியையும் மாத்திரம் ஒருகூட்டில் அடைத்தார். ஆண்கிளி பெண்கிளியுடன் கொஞ்சிக் குலாவி அதனைத் தனக்குப் பேடாக இருக்க உடன்படும்படி செய்துகொண்டது பின்னர் அதே கூண்டில் 12 கிளிகள் விடப்பட்டன. ஆனுல் புதிதாகக் காதலியைப்பெற்ற அந்த ஆண் கிஞ்சுகம் புதிதாக அடைக்கப்பட்ட 12 பெண்கிளிகளையும் கண்ணெடுத்துப்பார்க்கவில்லை. அதுஅவ்வளவு தன்னடக்கத்துடன் நடந்து கொண்டது. டாக்டர் ஹல்டா 12 பெண்கிளிகளையுமெடுத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் புதிதாகவந்த ஆண்கிளிகளை அக்கூட்டிலடைத்தார்; புதிதாகக் காதலனைப்பெற்ற அப்பெண்கிளி புதிதாக வந்த ஆண்கிளிகளின் அழகைச் சற்றும் சட்டைசெய்யவில்லை. அதுவும் தனது கணவன் மாதிரியே மற்றக்கிளிகளைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை.

(சு. மி)

## பிரமசரியம்.

மகாத்மா காந்தி நவ இந்தியாவில் பின்வருமாறு எழுதுகிருர்:—

நன்ருய் விவாதித்து ஆழ்ந்த சிந்தனை செய்த பின்னர் 1906-ம் ஆண்டில் நான் பிரமசரிய விரதம் பூண்டேன். அதுவரை என் மனையாளிடம் இவ்விஷயமாகப் பேசினதில்லை. விரதம் எடுத்துக்கொண்ட மட்டுமே அவளிடம் கலந்துபேசினேன். அவள் ஆட்சேபம் எதுவுங் கூறவில்லை ஆனுல் நான்முடிவான தீர்மானம் செய்தல் எளிதாயில்லை அதற்கு வேண்டிய மனவலிமை எனக்குப் போதாமலிருந்தது. சிற்றின்ப இச்சையை அடக்கியாள்வதெப்படி? மனைவியிடத்தில் சிற்றின்ப சேர்க்கை இல்லாத உறவுபூண்டிருத்தல் ஒரு புதுமையாகத் தோன்றிற்று ஆனுலும், ஆண்டவன் அருள்வலிமையில் பூரண நம்பிக்கையுடன் துணிந்து விரதம் பூண்டேன் சென்ற இருபது ஆண்டுகளாக இவ்விரதத்தினின்று நழுவாமல் காத்துவந்திருப்பதை எண்ணும்பொதெல்லாம் எனக்கு அளவற்ற மகிழ்ச்சியும் வியப்பும் விளைகின்றன. 1901-ம் ஆண்டிலிருந்தே புலனடைக்கத் துறையில் முயன்று ஓரளவு வெற்றிபெற்று வந்திருந்தேன் ஆனுல் 1906-ல் விரதம் பூண்டபின்னர் நான் பெற்ற உரிமை இன்பத்தை அதற்கு முன் எப்பொழுதும் அடைந்ததில்லை. ஏனெனில் விரதம் பூண்பதற்கு முன்பு எந்தநிமிஷத்திலும் நான் ஆசைக்கு அடிமையாகி விடுதல் கூடுமானதாயிருந்தது

(தொடர்ச்சி 4-ம் பக்கம்.)

## பத்திராதிபரின் விசேஷ அறிக்கை.

இந்த யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டுமிருக்கும் சாதியர்களாகிய நாங்கள் சீர்திருத்தம் கல்வியின்றி இருக்கும் நிலைமையைப் பார்க்கும் பொழுது பரிதாபமாயிருக்கின்றது.

உங்களுக்கு உங்களைச் சீர்திருத்திக்கொள்வதற்கும் மற்றைய சாதியார்களைப் போல முன்னேற்றம் அடையவும் விருப்பமிருந்தால் இந்தச்சங்கத்தில் சேருங்கள். ஒரு சங்கத்தில் சேர்ந்து தாங்கள் ஐக்கியமாயிருந்து ஒத்து உழைத்தால் எப்படி முன்னேற்ற மடையலாம் என்று சேர்ந்த பிறகுதான் விளங்கும். எங்களுடைய மக்களைப் படிப்பிப்பதற்காக ஓர் ஆங்கிலமும் தமிழும் படிப்பிக்கக்கூடிய பள்ளிக்கூடம் ஏற்படுத்துவது எங்கள் கோரிக்கை.

எங்களில்தட்டுக்கெட்டவர்களும் சேர்வதற்கு வசதியாகப் பிரவேசக்கட்டணமும, மாதாந்தக்கட்டணமும் சதம் 25 ஆக ஏற்பட்டிருக்கின்றது. போலி நியாயங்கள் பேசித்திரியும் வீணர்களின் வார்த்தைகளை நம்பி மோசம்போகாதீர்கள். எங்களுடைய கஷ்டங்களையும் நிர்ப்பாக்கிய நிலைமையையும் யாவரும் அறியும்படியாகவும் எங்கள் முன்னேற்றத்திற் காகவேண்டிய வழிகளுக்காகவும் சக்கத்தால் வெளிவரும் "திராவிடனை" ஆதரியுங்கள்.

திராவிடன் யாவராலும் வாங்கி வாசிக்கும் பொருட்டுச் செலவைக் கருதாது மிகவுங்குறைந்த சந்தாவாக வருஷம் ஒன்றுக்குத் தபாற்கூலி உட்பட 1-25 ஆகவும் வெளிப்படுத்தியிருக்கிறேம்.

கொம்மற்றியார்.

1. திராவிடனுக்குச் சந்தாதாராகச் சேர விரும்புங் கனவான்கள் முற்பணமனுப்பியேனும் அல்லது வி. பி. மூலமாயேனும் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. பணமனுப்புகிறவர்கள் பொக்கிஷதார் யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம், சுன்னுகம் என விலாசமிட்டனுப்பவேண்டும்.
3. உள்ளூர்ச் சந்தாதாரர்களும் மேற்காட்டிய விதமே சந்தாத்தொகையைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளவும்.
4. கடிதமெழுதுவோர் தங்கள் விலாசத்தைத் தெளிவாய் ஒவ்வொருமுறையுமெழுதவேண்டும்.

## விஷயதானம் புரிவோர்க்கு.

1. கல்வி ஞானம், தெய்வபக்தி, ராசவிசுவாசம், நல்லொழுக்கம், ஒற்றுமை, சிறுவர் சிறுமிகள் கற்றுக் கொள்ளவேண்டிய விதிகள். இன்னும் பொது நன்மையைக்கருதி எழுதி அனுப்பும் விஷயங்களை மிக வந்தனத்துடன் ஏற்கப்படும்.
2. விஷயதானம் புரிவோர் தெளிவாகக் கடிதத்தில் ஒரு பக்கத்தில் மையினுல் மட்டும் எழுதி அனுப்பவேண்டுகிறேம். அன்றியும் பெயர், விலாசம் இவைகளை ஒவ்வொரு முறையும் தெளிவாக எழுதியனுப்புவதோடு புனைபெயர் பூண்டுகொள்வோரும் தமது உண்மையான பெயரையும் விலாசத்தையும் வெளியிட்டே தீரவேண்டும்.
3. அரசினருக்கு விரோதமாயும், மததூஷணையாயும், பிறருக்கு மனத்தாங்கலை உண்டாக்கக் கூடியதுமான விஷயங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

## திராவிடன் அறிவிப்பு.

கனந்தங்கிய பத்திர நேயர்களுக்கு நேரிலும், கடிதமூலமாயும் கேட்டிருந்தபடிக்குப் பத்திரிகை அநேகருக்கு அனுப்பமுடியாதிருந்ததற்காக மன்னிக்கவும். தேவைப்படுங் கனவான்கள் முற்பணமாய் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். கடிதம் எழுதுபவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கே எழுதவும்.

திராவிடன்,
ஆபீஸ்,
சுன்னுகம்.

# திராவிடன்.

சுன்னுகம்;— 1927,
மாசிமீ 29உ சனிக்கிழமை.

கண்ணின்றுகண் ணறச் சொல்லினுஞ்சொல்லற்
முன்னின்றுபின்னேக்காச்சொல். [க
குறள்.

## கண்ணிருந்தும் கபோதிகள்.

சகோதர, சகோதரிகளே,

இப்பொழுது எங்களில் எத்தனைபேர் எங்களைச் சுற்றியும் நடைபெறும் காரியங்களில் நாள்தோறுங் குறைந்தது ஐந்து நிமிஷமாவது யோசித்தும் பார்க்கிறார்கள். நாங்கள் கண்ணிருந்தும் கபோதிகள்போல நடக்கின்றேம்? அப்படி ஒருவன் யோசித்துப் பார்க்குங்கால், வெட்டைவெளிச்சமாக யாழ்ப்பாணத்திற் தோன்றுவது, மோட்டார் வண்டிகளும் சனங்களுடைய உடை நடை பாவனைகளுமாம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் சுமார் 500 மோட்டாரதங்களிருக்கின்றன. இத்தனை ரதங்களும், யாழ்ப்பாணவாசிகளுக்கு இன்றியமையாவா? (இதைக் குறித்துப் பிறகு) இத்தனை மோட்டார் வண்டிகளும், ஓர் ரதம் 2000 ரூபாய என்றுலும், 100000, ரூபாய் பெறும். இந்த ரதங்களைச் ஓடச்செய்வதற்குப் பெற்றேல் என்னும் மண்ணெண்ணெய் வேண்டும். குறைந்தது ஓர் காருக்கு ஒருநாளுக்கு 2 கலன் எண்ணெய் என்று வைத்துக்கொள்ளலாம். அப்பொழுது ஒருநாளுக்குக்குறைந்தது 1000 கலன் தேவை வரும். ஒரு கலன் 2 ரூபா, என்றுல் 1000 கலனுக்கு 2000 ரூபாய் செலவாகிறது. ஒருமாதத்திற்கு 30 நாட்படி 60000, ரூபாய் செலவாகிறது. ஒரு வருஷத்திற்கு அல்லது பன்னிரண்டுமாதத்திற்கு 72,0000 ரூபாய் செலவாகிறது. இது பெற்றேலுக்குமாத்திரம், இன்ஜின் எண்ணெய்க்கு என்ன, டையர்களுக்கு என்ன, மற்றுமுள்ள தட்டு முட்டுக்களுக்கென்ன. தவிர, தினசரிப் பத்திரிகைகளில் வெளிவரும் மோட்டார் விபத்துக்களைப் பாருங்கள். மோட்டர் வண்டிகள் ஓடும்பொழுது எழும் புழுதியினுல் சரீரத்திற்கு உண்டாகும் வருத்தங்களெத்தனை? டையர் வெடித்தும் எண்ணெய்யில்லாமலும் இடைவழியே நின்று அந்தரிக்கும் அந்தரிப்பென்ன! இவ்வளவு பெருந்தொகையைச்செலவழித்துஇந்தமோட்டார்வண்டிகளை வைத்து நடத்தும் முதலாளிகள் வருமானமில்லாமல் மாதாந்தக் கந்தாயம் (Instalment) கொடுக்க வழியில்லாமல் விழிக்கும் விழிப்பென்ன! எத்தனைபேர்கள் ஐஸ்வரியவான்களாகலாம் என்று இருக்கும் காணிகளையும் ஈடுவைத்து விட்டு வட்டிகொடுக்கவும் வழியின்றி முளிக்கவேண்டியிருக்கின்றது. மேலும், இக்கார்களினுல் சனங்கள் தங்கள் கால்களை அப்பியாசிப்பதற்கும் வழியின்றி, கார்களுடனும் கரத்தைகளுடனும், மனுஷவாகனங்களுடனும் காலம் கழிக்கவேண்டியிருக்கின்றது. மோட்டர் வண்டிகளின்றி அவைகளினுல் வரும் பொருள் நஷ்டத்தையும், ஒவ்வொரு வருஷமும், எங்களால் இவ்வளவு பணத்தைப் பெற்றேல்களிலும், டையர்களிலும் புறநாடுகளுக்கு அனுப்பிவைக்க முடியுமா?

இரண்டாவது எங்களில் பெரும்பாலாரும் அணியும், உடைகளைப்பற்றியும் சிந்திக்கவேண்டியிருக்கின்றது. ஆண்கள் தரிக்கும் உடைகளில் பல நிறங்களில்லை. நாங்கள் உடுக்கும் உடையானது, எங்களுடைய சுகாதாரத்திற்குப் பொருந்தியதாகவிருக்கவேண்டும். எங்களில் அநேகர் நாகரிகம் சீர்திருத்தம் என்னும் விளங்காப்பெயர்களுடன் சற்றும் பொருந்தாத உடைகளை அணிந்து உலாவுகிறார்கள். ஐரோப்பா தேசத்தின் சனங்கள் உடுத்தும் உடைகள் அவர்களைக் குளிரினின்றும் காப்பாற்றக்கூடியவைகளாகவிருக்கின்றன. அதுவுமின்றி அவர்களுக்கு அவைகளை உபயோகிக்கும் வகையும் தெரியும். எங்களவர்களோ, நகைப்புக்கு இடமாகும்படியாக, எந்த உடுப்பை எப்படி உடுக்கவேண்டுமோ, அப்படி உடுக்காமல், பார்ப்பதற்கு "வெருளிகளைப்போல் வெள்ளைக்காற்சட்டையும், நீல ஷர்ட்டும், சிகப்புடையும், மினுக்கமின்றிக் கிடக்கும் முதுசமென்று சொல்லக்கூடிய தொப்பிகளுடன் வெள்ளைச் சப்பாத்து, கருப்புக்கால்மேஷ்வுடனும் பவனிவருகின்றுர்கள். சீதனத்திற்கு வெளிக்கிட்டிருப்பவர்களோ தங்களுடைய 50 அல்லது 60 ரூபாய் சம்பளத்தில் 25 அல்லது 30 ரூபாய பெறும்படியான மேல்நாட்டுச் செய்கையான சப்பாத்துகளுடனும் (Navy-cut) சிகரட்டுடனும், சைகில் வாகனருடராய், ஒழுங்கை வழியாயும், ரோட்டு வழியாயும் சைகில்களைச்செலுத்தும் திறமைகளைக் காட்டவேண்டியிருக்கிறது. இவர்கள் உழைப்பைச் செலவுக்கு ஒத்துப் பார்க்குமிடத்து மிச்சம் என்ன! டம்பம், வீண்டம்பம் கண்ணிருந்தும் கபோதிகளாய்த் திரிகிறார்கள்.

## மதம் வேறு குருக்கள் கட்டுப்பாடு வேறு.

தாழ்த்தப்பட்ட வகுப்பாளர் இந்து சமயம் தங்களைத் தாழ்த்திக்கொண்டுவருவதெனச் சமயத்தின்மீது பழி சுமத்திப் பேசுவதற்காய்க் கைவல்லிய சுவாமியாரால் எழுதப்பெற்ற குறிப்பை இதன் கீழ்த் தருகிறேம்.

மதம்வேறு குருக்கள் கட்டுப்பாடுவேறு என்பதை மறக்கலாகாது. அவை ஒன்றுக்கொன்று தீயும் சாம்பலும்போலாம். மதத்தை மீறிக் கட்டுப்பாடு செல்லும்போது நதியை மணல் மூடுவதுபோல் ஆகிறது. அங்கு நீர் கெட்டுப் பாலைவனம் போல் தோன்றும். இந்த நிலையைக் கண்டு மகிழ்ச்சி யடைவோர் மிகக் கேடுகெட்டவர்களென்பது வெளிப்டையானுலும் நாமெல்லாம் அநேகமாக அதிலே முழுகிக் கிடக்கிறேம். இதில் முழுகாதசாதியெதுவோ அதுதான் தலைதூக்கும். ஒருவன் மற்றவனைக் கஷ்டப்படுத்தினுல் இருவருக்கும் கேடு என்று சமயஞ் சொல்லுகிறது. மகள் விதவையாகிப் பட்டினி கிடக்கும்போது இன்னதிதியில் அவளுக்குத் தாகத்திற்கு ஜலம் கொடுத்தால் பெற்றோர்களுக்குப் பாவமென்று குருக்களின்கட்டுப்பாடு சொல்லுகிறது. பச்சாத்தாபத்தாலும் சத்கர்மத்தாலும் ஒருவன் பாவத்தைக் கழுவலாமென்று சமயஞ் சொல்லுகிறது. கிரகணத்தன்று இன்ன நீரில் முழுகினுல் தன் பாவம் தீருவதுடன் பதினன்கு தலைமுறை பிதிர்கள் செய்த பாவமுந் தீருமென்று கட்டுப்பாடு சொல்லுகிறது. எல்லா இடங்களையுஞ் சுற்றி இவ்வழகிய உலகத்தின் வியப்புகளைக் கண்டுகளிக்கவேண்டுமென்று சமயஞ் சொல்லுகிறது. கடலைத் தாண்டினுல் பாவமென்று கட்டுப்பாடு சொல்லுகிறது. எக்குடிப் பிறந்தாலும் உண்மையுடையவன் தொழத்தக்கவனென்று சமயஞ் சொல்லுகிறது. பிராமணுய்ப் பிறந்தவன் மகா பாவியானுலும் அவன்தான் வணங்கத் தக்கவனென்று குருக்கள் கட்டுப்பாடு சொல்லுகிறது. புருடனுக்குப் பெண்சாதிதுணையாயிருந்து எப்படி ஊழியஞ்செய்யவேண்டுமோ அப்படியே பெண்சாதிக்குப் புருடன் செய்யவேண்டுமென்று சமயஞ் சொல்லுகிறது. பெண்சாதி வீட்டிற்கு விலக்காயிருக்குஞ் சமையம் நோயுற்று பேச்சற்று நாக்கிழுத்துக் கிடந்தாலும் புருடன் தொட்டுத் தண்ணீர் கொடுத்தால் நரகத்திற்குப் போவானென்று கட்டுப்பாடு சொல்லுகிறது. பெண்ணும் ஆணும் வயது வந்து பக்குவமடைந்து இருவர் பக்குவமும் பூரணப்பட்டபின், விவாகஞ் செய்துகொண்டு சுகமாய் இருங்களென்று சமயஞ் சொல்லுகிறது. ஒருவயதிலிருந்து பத்துவயதுவரையிலும் பத்துலக்ஷம் விதவைகள் நிரம்பிக் கொள்ளுங்களென்று கட்டுப்பாடு சொல்லுகிறது. பக்குவமொத்த ஆணும் பெண்ணும் பள்ளியறைக்குப் போங்கள் என்று சமயஞ் சொல்லுகிறது. அறுபது வயது ஆணுக்கும் பத்துவயதுப் பெண்ணிற்கும் விவாகமான மறுநாளே வீட்டிற்குள் குருவையும் பிடித்துத் தள்ளிப் பூட்டு என்று கட்டுப்பாடு சொல்லுகிறது. ஜீவகாருண்ணியமும் எல்லா ஆத்மாக்களிடத்தும் அன்புமே கடவுள் என்றும், இதைத் தெரிந்துகொள்ளுகிறவனே கடவுளைச்சேவிக்க உரிமையுடையவனென்றும் சமயஞ் சொல்லுகிறது. கடவுளைச் சேவிக்கப்போகும் வழியில் தண்ணீரில்லாமல் சாகும் ஒருவனுக்குத் தண்ணீர் கொடுத்தால அவன் பிழைப்பான் என்று பட்டாலும் அவனுக்குத் தண்ணீர் கொடுப்பதும் அவன் நிழல் நம்மீது படுவதும் பாவம் என்று குருக்கள் கட்டுப்பாடு சொல்லுகிறது. பாவத்தில் பெரிய பாவம் குடிக்கத் தண்ணீர் இல்லையென்பது. ஆலால் தவித்த வாய்க்குத் தண்ணீர் ஊற்றுதவன் பாவியென்று சமயம் சொல்லுகிறது. வீட்டிலிருந்து தண்ணீர்கொண்டுவந்து கொடுத்தால் வீட்டிலுள்ள தண்ணீர் எல்லாம் தோஷப்பட்டுவிட்டது என்று கட்டுப்பாடு சொல்லுகிறது. விஷயம் பெரிதானதால் விரிந்துவிடும். சுருங்கக் கூறுமிடத்து சமயம் விடுதலையைப் போதிக்கிறது குருக்களின் கட்டுப்பாடு பாவத்தைஉண்டுபண்ணி மக்களை அடிமைப்படுத்தி ஆனந்தப் படுகிறது. மதத்தின் பெயரால் பிழைப்பிற்காக ஏற்படுத்திக்கொண்ட சில கிரியைகளுக்கும் பாவனைகளுக்கும் சிறிது பணம் செலவு செய்துவிட்டு, தனக்கெல்லாம் வந்துவிட்டது, தான் செய்யவேண்டியதெல்லாம் செய்து முடிந்துவிட்டது என்று நினைப்பவர்கள் தங்களிடம் கணக்குக் கேட்கும் காலம்வரும்போது நஷ்டக்கணக்குத்தான் காட்ட முடியுமென்பதை உணரவேண்டும்.

## நமது கடமை என்றுலென்ன.

நாமிவ்வுலகில் மானிடதோற்றமெடுத்ததின் பயனுய் நாம் செய்யவேண்டிய கடமைகள் எவை என்பதை அறியவேண்டியது அவசியம். நமது கடமையென்றுல் பொருளைச் சம்பாதித்து தான்மட்டும் குடியிருப்பேனென்று மாட மாளிகை கூட கோபுரம் போல் வீடு முதலிய கட்டி பெண்டு பிள்ளைகளோடு உண்டு உடுத்தி ஜோக் செய்துகொண்டு சந்தோஷ சாகரத்துடன் காலங்கழிப்பதல்ல. அல்லது பெண்டு பிள்ளைகளையும் சுற்றத்தாரையும் பாராது தான்மட்டும் மதுபான பானமே அபிமான முண்டென்று கூட்டாளிமாரோடு கூடிக் குடித்து நாடகம் பார்த்து கூத்தாடிச் சந்தோஷங் கொண்டாடித் திரிவதல்ல. அல்லது தானே பெரியவன் யோக்கியன் புத்தியுள்ளான் குபேரன் கல்விமானென்று கர்வங்கொண்டு தம் மினத்தவர்களை விட்டு நீங்கி தான் மேல் ஜாதி; அவன் கீழ்ஜாதி; ஆரென்று தெரியுமா? முன் இவர்கள் எந்த நிலையிலிருந்தவர்கள்! இப்போது சட்டை தொப்பி சப்பாத்து அணிந்துகொண்டு திரிகிறார்களென "குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு" போல் தன் குலத்தையே கேவலமாகத் தூற்றி ஏளனம்பேசித் திரிந்து பங்கப்படுத்துவதல்ல. அல்லது நம் சாகியத்தாரின் நன்மையைக்கருதி பாடுபட்டுழைக்கும் பரோபகாரிகளை நிந்தையாகப்பேசி அவர்களின் மனதைப் புண்படுத்தி, எடுத்தகாரியத்தை சோரவிட்டேகும்படி முயற்சித்து இனத்துரோக முதலிய குலத்துரோகம் செய்வதல்ல. கொண்ட பெண் அருகிருக்க பிறர் மனையேகி கூடிக்குலாவிக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருப்பதல்ல. ஒருவன் செய்யுங் குற்றத்தையோ குறைவையோ அறிந்தும் அவனுக்கு நன்மதிபுகட்டி நல்வழிக்குத் திரும்பாது பலவாறுபேசி பலரிடமுஞ் சொல்லி படுகுழியில் வீழ்த்திப் பங்கப்படுத்துவதல்ல. ஆனுல் நாம் செய்யவேண்டிய கடமை என்ன? இப்பிறப்பில் நமக்கு அருமையாய்க் கிடைக்கப்பெற்ற இம்மானிட ஜன்மத்தை எடுத்ததின் பயனுய் முதலாவதாக நம்மை உண்டாக்கி காத்து ரட்சித்து அருளப்பட்ட ஈசனருள் பெற்று சுக சந்தோஷ நற்குண நற்செய்கை உடையோராய் இவ்வுலகில் வாழ்ந்து இறுதியில் பரமசொரூபியாயிருக்கும் பரம்பொருளை அநுதினம் காலை மாலை இருவேளையும் நமஸ்காரம் செய்து அப்பால் அவனருளால் கிடைக்கும் ஊதியத்தை வீண்விரையஞ் செய்யாது தன் மட்டுமரியாதை தெரிந்து காலங்கழிக்கக்கூடியவிதமாய் சிக்கனமாய் செலவுசெய்து பிற்காலத்திற்கு தனக்கும் தன் பெண்டு பிள்ளைகளுக்கும் உதவக்கூடியவிதமாய் தன்னுல் கூடுமானவரையும் தானதருமங்களை செவ்வனே நடத்தவும் தன் சுற்றத்தார் தன் குலத்தவர்களுக்கு உதவக்கூடிய விதமாயும் நடத்தவேண்டியது நம்முடைய கடமைகளி லொன்றுக இருக்கவேண்டும்.

## பத்திரிகை.

பத்திரிகை என்றுல் என்ன என்பது தற்போது சிறுவர்க்கும் பத்திரிகைமலிந்த காலத்துத் தெரிந்த ஓர் விஷயம். இருந்தும் தாழ்த்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும் நெருக்கப்பட்டும் தம் சீவியத்தை கடத்தி வரும் நம் சகோதரர்களே தயைசெய்து கவனியுங்கள். ஒரு நாட்டின் உயர்ச்சியைக் கருதியும் ஓர் சாதியினரின் மேன்மையைக் கருதியும் ஒருபாஷையின்வளர்ச்சியைக் கருதியும் இன்னும் பலவற்றிற்காகவும் பத்திரிகைகள் வெளிவருவதுண்டு. ஒரு பத்திரிகை வெளிவரும்பொழுது இன்னின்ன காரியங்களைத் தெண்டித்தும் முடிப்பதற்கென்ற தீர்மானத்துடன் வெளிப்படுகிறது. தனக்கென யாதொரு

விஷயத்தையுங் கொண்டிராத பத்திரிகைகள் உண்மையளவில் பத்திரிகை ஆகா. அவ்வித பத்திரிகைகள் தாம் எதற்காக எழுந்தனவோ அதையே பலவகையாலும் நன்கு நிலைநிறுத்தற்கு வேண்டிய கடமைகளை ஊக்கத்துடன் இடையறாமல் செய்து வருவதனாற் கூடிய நோக்கம் நிறைவேறிவிடுகின்றது. அப்பொழுது அது வெற்றியுடன் கருதப்படுகிறது. ஒரு நாட்டிற் தோற்றிய பத்திரிகைகளெல்லாம் தாம் கொண்ட நோக்கத்தை முற்றுப்பெறச் செய்தலின் அந்நாடு கூடிய விரைவில் மேனிலையை அடைகின்றது. பத்திரிகைகள் தாம் செய்யவேண்டுவனவாகிய சடமைகளினின்று நீங்கி இருக்குமாயின் அவற்றின் நோக்கம் நிறைவேறுவதற்கில்லை. அப்பத்திரிகைகளை ஒருவரும் வாங்கி வாசிக்கவும் விரும்பார்கள். அவற்றால் நாட்டிற்கு ஒரு நன்மையுமுண்டாகாது. அவைகளெல்லாம் பேருக்குமாத்திரம் பத்திரிகைகள் என்பனவேயாம். நம் தாழ்த்தப்பட்டவர்களின் ஐக்கியத்திற்கும் சேமத்திற்கும் மேனிலையை அடைவதற்கும் பத்திரிகையே இன்றியமையாத ஆவசியம் வேண்டும்.

## பொது வர்த்தமானம்.

இலங்கை முத்துக்குளிப்பு இவ்வருடத்திலே நடவாதாம் சிப்பிகள் வளமாயிருக்க வில்லையாம்.

இலங்கை அரசினர் வெள்ளத்தினால் நேர்ந்த மலாய்நாட்டினர்க்காய் 10000பவுண் அனுப்பத் தீர்மானித்திருக்கின்றனராம்.

இலங்கைச் சட்டநிருபண சபையில் போஸ்ற் காட்டின் விலை இரண்டுசதமாகவும் பற்றுச்சீட்டிற்கு ஐந்துசத முத்திரை ஒட்டிப் பாவிப்பதற்காய் யோசனை நடைபெற்றிருக்கிறதாம்.

இலங்கையின் குடிசனங்கள் சுமார் 50லட்சம் சனங்களிருக்கிறார்கள் புத்தர்களான சிங்களவர் சுமார் 28லட்சம் இந்துக்கள் 10லட்சம், கிறிஸ்தவர்கள் 4½லட்சம் முசிலீம்கள் சுமார்3½ லட்சம்.

இந்தமாசம் பருத்தித்துறையில் பள்ளிக்கூடத்திற் படித்துக்கொண்டிருந்த அல்வாய்ப் பகுதி மாணவன் ஒவருவர் ஷெ பள்ளிக்கூடச் சோதனையில் பெயில் போன காரணமாக கழுத்திற் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டனராம்.

இலங்கையில் உள்ள பூமியில் ஐந்தில் ஒரு பகுதியே வேளாண்மைக்குள்ளா யிருக்கின்றது.

அவைகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| தென்னை சும்ர் | 9லட்சம் | ஏக்கர் |
| நெல்வேளாண்மை | 8½ லட்சம் | ,, |
| தேயிலை | 4½ லட்சம் | ,, |
| ரப்பர் | 4½ ,, | ,, |
| புன்செய்தானியங்கள் | 1 ,, | ,, |
| கொக்கோ | 35,000 | ஏக்கர் |
| கறுவாப்பட்டை | 25,000 | ,, |
| புகையிலை | 12,000 | ,, |

### கலிகாலத் தேங்காய்.

சென்ற மாசம் கருத்துறைத்தென்னந்தோட்டமொன்றிற் பறித்த தேங்காய்களுள் விநோதமுடைய தேங்காய் ஒன்று காணப்பட்டதாம். தேங்காயின்உட்புறம் நொங்கின் கண்களையொத்த மூன்று அறைகளிருந்தனவாம். அறைகளின் பருப்பம் படிப்படியாக கூடியிருந்ததாம். சிறிய அறையில் தேனிலும் இனிமையான இளநீரும் அடுத்த அறைகளுள் வெண்ணெயின் நிறமும் தடிப்பும் ருசியுமுள்ள இளநீருமிருந்தனவாம். தேங்காய் 8அங்குல சுற்றளவும் 6அங்குல நீளமுடையதும் மற்றத் தேங்காய்களிலும் பார்க்க பெரிதாகவும் காணப்பட்டதாம் சிரட்டை ¼ காலங்குலத் தடிப்பு. உட்பகுதியிலேயே இந்தவிநோத அறைகள் காணப்பட்டனவாம்.

### கோவிலும் விழாவும்.

பணத்தை மனிதன் எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தேடி ஒரு சிறிதேனும் பயனற்ற விதமாய் வீணே செலவழித்துத் தானும் தரித்திரநிலையை அடைவதற்கு பந்தையமென்ன என்பதுபோல் நம் கோவில்களும் திருவிழாக்களும் தொடங்கிவிட்டன. தாசியர் நடனத்திற்கும் சங்கீதமேளத்திற்கும் வாணவேடிக்கைகளுக்கு மென்றால் விருதுபேசிப் பணங்களை அள்ளிக்கொடுத்து வீண் சோம்பேறிகளின் வார்த்தைகளிலீடுபட்டு தமக்கேனவரும் நயநட்டம் முதலியவைகளைத் தானுங் கவனியாது இன்றைய திருவிழாவிலும் பார்க்க நாளைக்கு என இப்படியே ஏமாறுது நம் ஆத்தும ஈடேற்றத்திற்குரிய தருமகைங்கரியத்தில் உங்கள் பணங்கள் சேருவதினால் நீங்கள் அடையுஞ் சென்மங்கள்தோறும் உங்களுக்கு முன்னாக நிற்பது, நீங்கள் இப்பொழுது தேடிக்கொண்ட தருமம் என்பதையாவரும் ஒத்துக்கொள்வர். சுவாமி விடைகொடுத்தாலும் பூசாரி விடைகொடார் என்பதற்கிணங்க வீண் டம்பமான விழாசெய்வதற்கு கேதியின்றியிருப்பதை சுவாமி அறிந்திணங்கினாலும் கோயிற்சுவாமிகள் மறுக்கிறார்களாம்.

### சுப்பிறீங்கோடு.

இவ் வருடத்துக்குரிய முதலாந்தவணைச் சுப்பிறீங்கோடு சென்றமாசம் 14-ந்திகதி தொடங்கி நடைபெறுகின்றது. மெஸ் F. C டற்றன் நீதிநூராசா அவர்கள் விசாரணைகளை நடத்துகின்றார் 13வழக்குகள் விளக்கத்திற்கிருக்கின்றன; அவையில் கொலைக்கேசுகள் 5. முதலாவதாக சாவகச்சேரிக் கொலைவழக்கு விளங்கப்பட்டது. எதிரி தகப்பனைச் சுட்டுக்கொல்ல எத்தனித்தானெனக் குற்றஞ்சாட்டப்பட்டு நின்றான்; விளக்கத்தில் வேண்டுமென்று எதிரி சுடவில்லையென்றும் தற்செயலாக வெடிகுண்டு தந்தைமேற் பாயநேர்ந்ததென்றும் நியாயம் ருசுவானதால் யூரிமார் எதிரி நிரபராதியென வெளியிட நீதிபதி அவனை விடுதலைசெய்தனர்;

இரண்டாவது மீசாலைப் பெண்தூக்கிய வழக்கு விளக்கத்திற்கு எடுக்கப்பட்டது. இவ் வழக்கில் எதிரிகள் மூவர். விளக்கத்தில் மூவரும் குற்றவாளிகளெனக் காணப்பட முதலாமெதிரிக்கு 3வருடக் கடுஞ்சிறையும்; 2-ம் எதிரிக்கு 2வருடச் சிறையும் 3-ம் எதிரிக்கு ஒருவருடச்சிறையும் விதிக்கப்பட்டன; பின்னுமோர் கொலைவழக்குத் தள்ளப்பட்டது.

நாலாவதாக; சுன்னாகம் கொலைவழக்கும் ஐந்தாவதாக; வவனியாக் கொலைவழக்கும் விளக்கத்திற் கொடுக்கப்பட்டது. இதில் எதிரிகள் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தனித்தனி எழுவருடதண்டனை விதிக்கப்பட்டனர்; பின் ஆறுவதாக; தென்மராட்சிக் கொலைவழக்கு விளங்கப்பட்டு எதிரி சுற்றவாளியெனக் கண்டு விடுதலைபடைந்தார்;

### சுகாதாரம்.

யாழ்ப்பாணத்தின் சுகாதாரவிஷயமாக வடமாகாண ஏசண்டர் மெஸ். நசல் துரையவர்களும், யாழ்ப்பாண நகரசங்கத் தலைவர் கௌரவ A. கனகரத்தினம் அவர்களும் சில தினங்களுக்குமுன் ஓர் பகிரங்க கூட்டம்கூட்டினர் கூட்டத்தில் அனேகர் சமுகங்கொடுத்தனர் ஏசண்டரவர்கள் அங்கிராசனம்வகித்தார். இவர் தமது பிரசாரணத்திலே சுகாதரஸ்தாபனத்தால் ஊரவர்களுக்கு உண்டாகும் நன்மைகளைப்பற்றி விஸ்தரித்து அதை மதித்து உதவிபுரிவதற்கு நீங்கள் முன்வரவேண்டுமென வற்புறுத்திக் கூறினர். சுகாதாரப் பகுதித் தலைவராகிய டக்றர் செல்லப்பா அவர்களும் தற்கால சுகநிலைமையைப்பற்றி எடுத்துக் காட்டி அதிற் காணப்படும் குறைகள் உபாயமாய் நீக்கப்பட வேண்டுவ தவசியமென்றும் மறுபட்டினங்களின் சுகநிலையோடு யாழ்ப்பாணத்தை ஒட்டி அவர் பேசியவற்றை அனேகர் ஒத்துக்கொண்டார்கள். அவர் யாழ்ப்பாணத்தின் சுகநிலையின் தாழ்வால் காணப்படும் மரணங்களின் வீதத்தையுந் தெளிவாய்க் காட்டினர்.

றிச்சிஸ்றார்ச் செனறலின் கணக்குப்படி குழந்தைகள் மரணம் இலங்கையின் மற்றைய இடங்களிலும்பார்க்க யாழ்ப்பாணத்திலே அதிகரித்துவருகின்றதென்பது உண்மை முழுஇலங்கையின் கணக்கோடு ஒத்துப்பார்க்குமளவில் ஏற்றமாகவே வீதங் காணப்படுகிறது முழு இலங்கையின் மரணச்சராசரி ஆயிரத்திற்கு 190. யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு சராசரி ஆயிரத்திற்கு 386. யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வீதம் 205. ஆகின்றது. இதன்படி யாழ்ப்பாணத்தின் சுகநிலையின் தாழ்வு எவ்வளவெனப் பூரணமாய்ப்பேசிமுடித்தார். நம் அரசினரும் குறைவை நிவிர்த்தியாக்கும் நோக்கமாய் 50,000 ரூபாய் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்களாம்.

## பிறதேசவர்த்தமானங்கள்

சீனாவின் கலகம் எப்படியும் இரத்தஞ்சிந்துதலின்றி ஒருவாறு சமாதானமாய் ஒழுங்கு செய்துகொள்ளுவார்களாம்.

1930-ம் ஆண்டுவரையிலும், உலகம் சமாதானமடைய மாட்டாதென்றும் பலவகைத் தொல்லைகள் ஏற்படுமென்றும் திண்டுக்கல் ஜோதிடர்ஒருவர்கண்டிப்பாய்க்கூறுகின்றாராம்

கும்பகோணம் ஐக்கோர்ட்டு வகீலின் மனைவி ஐம்பது ரூபாய் தமக்கு மாதவீதம் சீவனும் சமாய் கொடுக்க வேண்டுமென வக்கீலான தமது கணவர் மீதுவழக்குப் போட்டிருக்கிறாராம்.

மோட்டோகார் வண்டிகள் செய்யும் பெரிய கம்பனியின் தலைவரான ஹென்றி போர்டு என்பவரின் மோட்டோகார்க் கம்பனியை இருபது கோடிபவுண் விலை கேட்டும் அவர் கொடுக்க மறுத்துவிட்டாராம்.

அமரிக்க கொம்பனியார் இரண்டுகோடி மோட்டர் வண்டிகள் இயற்றி இருக்கின்றனராம்; இத்தொகையை அமரிக்காவின் குடிசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒவ்வொரு குடும்பத்திற்கு ஒன்று வீதமாகின்றதாம்.

உலகமுழுமையும் சுற்றி, இருபது கோடீசுரர்கள் உட்பட 311 அமரிக்கர்கள் யாத்திரை மார்க்கமாக பம்பாயில் வந்திறங்கியிருக்கிறார்களாம். இவைகளுள் நாற்பத்தைந்து பேர் விதவைகள் அவர்கள் மூட்டை மூட்டையாகப் பணங் கொண்டுவந்திருக்கிறார்களாம்.

சீனதேசத்தின் மாணவர்கள் மகாத்மா காந்தியவர்களைச் சீனாவிற்குவரும்படி அழைக்கிறார்களாம், அம்மாணவர்களின் அழைப்பை ஒத்துக் கொண்டாலும் இவ்வருடம் வரமுடியாதென்றும் அடுத்தவருடம் வருவேனென்றும் மறுமொழி கொடுத்திருக்கிறாராம்.

சென்னையிலுள்ள ஆலை ஒன்றிலே கூலிவேலைசெய்யும் ஒருஸ்திரி ஒருவயசும் நிறையாத தனது குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்ததின் குற்றத்திற்காய் ஆலையின் முதலாளி முக்கால் ரூபாய் குற்றமடித்திருக்கிறாராம்; இந்த முதலாளி கருணைக்கு கர்த்தவரென்பதற்கையமில்லை

இங்கிலாந்தில் ஏவார்ஸடர் என்னுமிடத்தில் பழைய மாளிகை ஒன்றில் இரவுதோறும் ஓர் அழகு பொருந்திய இளம் பெண்போல் ஒரு பேய் தோன்றி அனேக வேடிக்கை செய்கின்றதாம் நூற்றுக் கணக்கான சனங்கள் வந்து, கூடுகிறார்களாம் வந்து போகும் பேயுடன் பேசுமாறு காத்திருந்த ஞானி ஒருவர் இன்னும் பலனடையவில்லையாம்.

காசியில் சென்றுபோன பஞ்சமித்திதியன்று தீண்டாத வகுப்பாரனென்னும் தாழ்த்தப்பட்டவர்கள் எல்லோருங் கங்கை நதியில் தீர்த்தமாடி காசி விஸ்வநாதன் கோவிலுக்குள் சென்று கடவுளைத் தொழுவதென ஏற்பாடு செய்திருந்தார்களாம். அதற்கு வைதீகர்கள், அஞ்சியதால் அதிகாரிகள் தலையிட வேண்டிவந்ததற்காய், தீர்த்தமாடியவர்கள் கோவிலுக்குள் போகவில்லையாம். தீர்த்தமாடினாலும் தீவினை போகவில்லை.

எமது அரசர் சீனாவிலே தற்போது பிறதேசத்தவர்க்கு விரோதமாய் நடக்குங் கலகங்கள் பிரித்தானியர்க்கே அதிக கஷ்ட நஷ்டத்தை விளைவிக்கின்றன வென்றும், அதற்காய் அங்கு யுத்தக் கப்பல்களை அனுப்புவது அவசியமாய்க் காணப்படுகின்றன என்றும் அது தமக்கு விசனமென்றும். அப்படியானாலும் சீனாவிலிருக்கும் பிரித்தானிய இந்திய பிரசைகளைக் காப்பது அவசியமென்றும் யுத்தம் நிகழாதபடி சமாதான ஒழுங்கு செய்வது தமது வாஞ்சையென்றும் கூறினாராம்.

110 மேல் மாடியுள்ள கட்டிடம் நியூயோர்க் நகரத்தில் கட்டப்பட்டு வருகிறதாம்; தரைமட்டத்திலிருந்து 1203 அடி உயரமிருக்குமாம்; உலகத்திலுள்ள கட்டிடங்கள் உயரத்திற்கு இதுபோன்றில்லையாம், கட்டிடத்தின் மதிப்பு 45,00,000-பவுணுகுமாம் வருஷத்தின் வாடகை 600,000 பவுணுகுமாம் உலகத்தில் பெரிய பணக்காரன் மிஸ்றர் ஹென்றி போர்டு போட்கார் மூலமாகவே அதிகபணஞ் சம்பாதித் திருக்கிறாராம்; வங்கிகளிலிருப்பது 800 லட்சம் பவுணும்; எல்லாமாக அவரிடமுள்ள தொகை 40000 லட்சம் பவுணும்.

போர்டோவின்பிஷப் தம்சபையைச்சேர்ந்த பெண்களுக்குச் செய்த வோர்பிரசாரணத்தில் தகுந்தவகையாய் உடைதரித்திராத எந்தப் பெண்ணும் ஆலய ஆதாரணைக்காவது பாவ அறிக்கைக்காவது வரப்படாது. பெண்களின் உடை உயர்ந்த கழுத்துள்ளதாயும் குறைந்தபட்சம் முழங்கைவரையுமாவதுமூடத்தக்க கைகளுள்ளதாயுமிருத்தல் வேண்டும் சிறுபெண்களின் பாவாடை முழங்காலுக்குக் கீழே வரத்தக்கதாயும் வளர்ந்த பெண்களின் பாவாடை இன்னும் போதிய நீளமுள்ளதாயும் இருத்தல் வேண்டும். இப்படித்தக்கவிதமாய்உடுத்தியிராத பெண்கள் சபையின் ஆராதனைகளிற்பங்கு பெறக் கூடாது என்று சொல்லியிருக்கிறார் நந்தேசப் பெண்களும் இவைகளைக் கவனிக்க வேண்டுமோ.

இங்கிலாந்தில் இதுவரை மூன்று குருடர்கள் பாரிஸ்டர் பரீட்சையில் தேறி இருக்கின்றார்களாம். நிர்வாகஉடை கத்தோலிக்கத் தலைவராகிய போப், பிரான்ஸ் சேர்மனி முதலிய தேசங்களிலுள்ள தம் சபைகளின் குருமாருக்கு யெழுதி அனுப்பிய நிருபம், மனிதர்கள் தேகத்தை மறைத்துக் கொள்வதே உடுப்புகளின் முக்கிய நோக்கம்; அப்படியில்லாது அனேக பெண்கள் தங்களது நிலைமையை மறந்தும் தங்கள் மானத்தைக்குலைத்தும் இளைஞரில் இச்சையை எழுப்பி விடத்தக்க உடைகளைத் தரிப்பது மிகவுந்துக்கத்துக்கும் வெட்கத்துக்குமேது வாயிருக்கின்றது, மேலும் தேகத்தை மூடிக் கொள்வதற்கேயன்றி வெளியாகத் திறந்து விடுவதற்காக உடைகளை உண்டாக்கவில்லையென்றும் இத் துன்மார்க்கத்துக் கேதுவான நவீன உடைகளைத் தடுப்பதற்காய் ஆண்களை உதவி செய்யவேண்டுமென்றும் எழுதியிருக்கின்றனராம்.

பீஹாரில் சோனபுரி என்கிற ஊரில் மகாத்மாகாந்தி அவர்கள் பெண் மணிகளுக்காய் சொல்லிய பிரசங்கத்தில் பின்வருமாறு பேசினார்— சீதாதேவியை எண்ணுங்கள், அவள் ராமனுடன் பதினான்கு ஆண்டுகள் வனவாசஞ் செய்தபோது. உங்களைப் போல் கனமான ஆபரணங்களைப் பூண்டு சென்றனளா? இவ்வணிகள் உங்கள் அழகை அதிகப்படுத்துகின்றனவென்று எண்ணுகின்றீர்களா? இரண்டுமில்லை சீதை உடலழகைவிட உள்ள வனப்பையே பெரிதாகக்கருதினாள். அவள் உடம்பில் ஆயகதராடையே அணிந்து சென்றாள் நீங்கள் அணிந்துள்ள ஆபரணங்கள் அவலட்சணமாயிருப்பதோடு அவற்றில் தீமையுமுண்டு ஏனெனில் அவை அழுக்கைச் சேர்த்து வைக்கும் பாண்டங்களாயிருக்கின்றன இவ்விலங்குகளிலிருந்து விடுதலை பெறுங்கள் அதேசயைத்தில் உடுக்க ஆடையுமில்லாத ஏழைகளின் வறுமையைப் போக்குங்கள். ஜெர்மனியில் பிரஸ்லா என்னுமிடத்தில் ஒரு பருத்தஸ்திரிதான் கனமாயிருப்பதால் உணவைக்குறைத்து கனத்தைக்குறைத்து அழகை உண்டுபண்ணிக் கொண்டாளாம். பாரமும் 31 பவுன் நிறை குறைந்து விட்டதாம். கனம் குறைந்தபடியால் அழகும் குறைந்து விட்டதென்று அவள் புருஷன், வழக்குப் போட்டு கலியாண எழுத்தை தள்ளிவிட்டாராம்.

### தீண்டாமை.

(முற்றொடர்.)

இங்ஙனம் பிரமதேவனுக்குரிய மாதாகிய ஊர்வசியின் உடலில் தோன்றிய வசிட்டமகாமுனிவரும், அந்த வசிட்டமகாமுனிவரின் சண்டாளத்துவ முடைய அருந்ததியின் உதரத்திலே உற்பவித்த சத்தியமகாமுனிவரும் அந்தச் சத்தியமகாமுனிவருக்கு நீசத்துவமடைந்த பெண்ணின் தோள்களை அணைந்ததினால் உற்பவித்த பராசமுனிவரும், அந்தப் பராசமகாமுனிவருக்கு மீன்வாணிபஞ்செய்யும் பரவமாதாகிய மச்சகந்தியினது வயிற்றிலே பிறந்த வேதவியாசமுனிவரும் ஆகிய இந் நால்வரும் பிறப்பில் இழிந்தவர்களாயிருந்தும், தங்கள் ஒழுக்கம் முதலிய மேம்பாடடைந்து சிறந்து விளங்கவில்லையா? ஈண்டும் உரைப்பது சாதிபேதமென்பதும் தீண்டாமையென்பதும் அஞ்ஞான வேறுபாட்டினாலேற்படுவனவேயாம். இந்த அஞ்ஞான இருளை யகற்றி மெய்ஞான சுவீகரத்தைப் பெறுவதற்கு அரும்பெருந் துணையாயுள்ளது கல்வியேயாகும். கல்வியானது எவர்கள்பால் மிகுந்து காணப்படுகின்றதோ அவர்கள் உயர்ந்தவர்களேயாவர். உயர்ந்த வகுப்பிற் பிறந்தும் கல்வியென்னும் மணமே இல்லாவிடில் அவர்களைத்தானும் தாழ்த்தப்பட்ட குலத்தினராகவே கருதப்படும்.

களர்நிலத்துப்பிறந்தவுப்பினைச்சான்றோர்
விளைநிலத்துநெல்லின் விழுமிதாக்கொள்வர்
கடைநிலத்தோராயினுங்கற்றறிந்தோரைத்
தலைநிலத்துவைக்கப்படும்,

என்னும் செய்யுளும் கல்வியறிவுடையோர்களை உயர்ந்தவிடத்திலும், கல்வியறிவில்லாதவர்களைத் தாழ்ந்தவிடத்திலும் வைக்கப்படுமென உரைக்கின்றது. நம் சகோதரர்களாகிய தாழ்த்தப்பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் காலமாறுபாட்டினால் கல்வியறிவினை இழந்து யாவராலுந் தாழ்த்தப்பட்டிருப்பதுடன் நல்லொழுக்கத்திற்கு மாறுபட்டு சீவ இரக்கமின்றி ஆகாரத்திற்காய் கொலை முதலிய செய்தலும், புலாலுண்ணலும் மதுபான மருந்தலுமாகிய தீய ஒழுக்கங்களை அனுசரிக்கின்றார்கள். இதுவெல்லாங் கல்வியறிவில்லாக் குறைவினாலேற்பட்டதேயன்றி அவர்கள்தான் தாழ்த்தப்பட்ட குலத்தவர்கள், இத்தீயனவாகிய வொழுக்கங்கள் அவர்களுக்குத்தான் உகந்தது எனச் சாத்திரங்கள் கூறவில்லை. சாத்திரங்களை ஆராய்ச்சிசெய்து ஆசார சீர்திருத்தத்துடன் உலகில் வாழும்படிக்கு நாம் அவர்களுக்குப் போதியகாலமும் உரிமையும் சௌகரியமும் வழங்காமல் என்றும் அவர்களை நாம் அடிமைகள் போன்றிருக்கும்படி செய்தும், ஒடுக்கப்பட்டவனென்றும் தாழ்த்தப்பட்டவனென்றும் தள்ளிவைத்து ஆண்டனுபவித்து வந்திருக்கின்றோம். இப்போது உயர்ந்த சாதியார்களாகிய எங்களது முன்னேற்றத்திற்கு இந்தச் சாதி வித்தியாசங்களும் அவைகளினாலேற்படும் மற்ற அநீதிகளும் பெருந் தடையாக நிற்பதுடன் எங்களையும் அதாவது மேல்சாதியினர்களையும் அடிமைவாழ்வி லாழ்த்திக்கொண்டிருக்கிறது. ஆகவே இத்தீண்டாமையென்னு மிக்கொடிய நோயை வேருடன் களையுமாறு உலகசிரேஷ்டர் மகாத்துமா காந்தியடிகளும் மற்றும் அரிய பெரிய தேசாபிமானிகளும் இந்தச் சாதிவித்தியாசங்களையும் தீண்டாமையையும் விட்டகற்றுமாறு சொல்லிவந்தார்கள்; இன்னும் சொல்லி வருகிறார்கள். ஆனால் நம் தேசத்தினர் முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாயுள்ள தீண்டாமையை யொழிக்க முன் வருவார்களென்று நம்புகின்றோம்.

இங்ஙனம்,
திராவிட நண்பன்.

### பெற்றோர் கவனிக்கவேண்டிய சில முறைகள்.

குழந்தைகளுக்கு கிரந்தி, தோஷம், மாந்தம், கணை, கரப்பன், சுரம், ஜன்னி, வலிப்பு, கழிச்சல், அக்கிரம், சோகை, காமாலை முதலிய பலவித நோய்களும், இவற்றின் கிளை ரோகங்களும், இவைகள் சம்பந்தமான ஒவ்வொன்றின் தொந்த ரோகங்களுமாக அநேக நோய்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடங்கி இடர் செய்வதற்கெல்லாம் தந்தையின் தேகக்கூறும் தாயின் கெற்பக்கூறும் அசுத்தமும் ஆகாரபேதமுமே வித்தாயிருக்கின்றனவென்பது தேர்ச்சிபெற்ற அநுபவம்.

செய்யுள்.

"செங்கிரந்திகருங்கிரந்திசெவ்வாப்புத்தான்
தீயானகரப்பானும்அரையிற்கானும்
அங்கமெலாம்செவ்வாப்புச்சிவந்தாகானும்
அகாவன்றிக்கருங்கிரந்திதொண்டைகட்டும்
பிங்கிரகம்பேய்த்தோஷம்பட்சிதோஷ
பின்னும்வெகுரோகங்கள்பிரித்துச்சொல்ல

அங்கரிதுகுழந்தைபிணிஅறிந்துதீர்க்க
ஆராலுமாகாதென்றான்சொன்னாரே.''

''சொல்லுகிறேன்குழவிக்குக்கரப்பானேது
தோஷமென்றவினையேது? மந்தமேது?
சொல்லுகின்றகணமேது? அக்கரங்களேது?
கூறும்வைசூரியென்றகுளறல்ஏது?
புல்லுகின்றதாயாலேதந்தையாலே
புணர்ந்துகொடிபடர்ந்தது மேல்படர்ந்ததிப்பால்
சொல்லுகின்றகரப்பானுங்கெற்பமேசம்
கோதுற்றதோஷமெல்லாம் மூலப்பாற்கூடே''

''சூடானமாந்தமெல்லாம் தாய்ப்பால்மாந்தம்
தொகையானகணங்களெல்லாங்கெற்பச்சூடு
பீடானஅக்கரங்களெல்லாம்தாயும்
பிதாவிருவர்சேர்க்கையினுல்எழுந்தசூடு
பாடானவைசூரியெல்லாம் அனுபோகத்தால்
படர்ந்ததிந்தவினையெல்லாம்.''

என்ற பாடலின்படி தங்களின் இளமைப் பருவத்தில் புத்திரோற்பத்தியும் உண்டாகிவிடின், உண்மையாகவே உலக இயற்கை உணராத பால்யவயதில் தங்களையும் தங்கள் செல்வச் சிறுகுழந்தைகளையும் பாதுகாத்துக்கொள்ளும் வகைகளும் வழிகளும் அறியாது, ஆசார ஆகார நித்திய கடமைகளாகிய சாதாரண வாழ்க்கையினுல் உண்டாகின்ற சுகாதாரத் தவறுகளினுல் சிறுகச் சிறுகத் தங்களுக்கும் தெரியாமலே பலவித நோய்களை உண்டாக்கிக்கொள்ளும்: உண்டான வியாதிகளையும் உடனுக்குடன் தடுத்துக்கொள்ள வகைதேடாமல் விருத்திசெய்துகொள்வதும், நோய் கூடுதலாகி அபாயநிலைக்கு வந்தபின், ''ஏழைக்குடும்பம் இராசவைத்தியம்'' என்றபடி தங்களது வருமானத்திற்கு மேற்பட்ட செலவில் வைத்தியம் செய்துகொள்ள நேருவதும், இதனுல் அப்போதப்போது உண்டாகும் கஷ்ட நஷ்டங்களும் எண்ணிறந்தன வெனல் சொல்லா தமையும்.

சுதேச வயித்தியன், V. M. K.

## இந்தியாவில் மோட்டாரதங்களின்பேரிற்செலவு.

இந்தியன் அன்டு ஈஸ்டர்ன் மோட்டர்ஸ் என்னும் பத்திரிகையில், இந்தியாவினுள் முதல் ஏழுமாதங்களில் வந்திறங்கின வண்டிகள் ஏப்பரல்மாதம் 1-ந்தேதி தொடங்கி அக்டோபர்மாதம் 31-ந்திகதி வரைக்கும் 1924, 1925, 1926, ஆண்டுகளிலே முறையே ரூபாய் 1, 21, 10, 755; ரூபாய் 1, 30, 18, 440; ரூபாய் 1, 52, 36, 495. வண்டிகள், அமெரிக்காவின் ஐக்கிய நாடு கனடா இங்கிலாந்து; பெல்ஜியம்; பிரான்சு; இத்தாலியும் மற்ற தேயங்களுமாம் அவைகளில், முக்கியமாக பெருந்தொகையாக, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்துகளி லிருந்துதான் வந்தனவாம். இவைகளிலே, வங்காளத்திற், 100க்கு 30 வீதமும், பம்பாய்க்கு, 100க்கு 29 வீதமும், சிந்துக்கு 100க்கு 15 வீதமும் மதராஸ்க்கு 100க்கு 11வீதமும் இந்த நாட்களில் 1924, 25, 26ஆம் ஆண்டுகளில் 541741; 467108; 607623; ரூபாய் பெறுமதியான மோட்டர் சைக்கில்களும் வந்தனவாம். (Modern Review)

## மாதர்களின் நல்லொழுக்கத்தைப்பற்றி பத்மாவதிக்கு கதாநிதி கூறுதல்.

பத்மாவதி. அம்மா! நீர் புண்ணியலோகம் பெற்றுச் சண்ணியமாயிருப்பது என்னத்தினுலே? அந்த விபரத்தை எனக்குச் சற்றே தயவுசெய்து சொல்லுங்க ளம்மாவென்று விளம்பினுள். அதைச் செவியுற்ற கதாநிதி பத்மாவதியை நோக்கிச் சொல்லுகின்றுள். எனக்கு இப்பேர்ப்பட்ட கதி எப்படி வந்ததென்றுல் பதிவிரதா தர்மத்தினுல் ஏற்பட்டது. மகத்துவமுள்ள பதிவிரதா தர்மத்தின்வரலாறு எப்படியெனில், நான் எனது மாமியாருக்கும் மாமனுருக்கும் வழிபட்டு அன்புபாராட்டி, நாளுக்கு நாள் அதிக மரியாதை உபசாரங்களை இயற்றி அவர்கள் ஒருபொருளைக் கேட்கு முன்னமே விரும்பிக் கொடுத்து, அவர்களுடைய பாதங்களைக் கழுவி பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து ஆசீர்வாதம் பெற்று வணக்க மிணக்கமாய், குணக் கேடின்றி மரியாதையுடன் பிணக்கமின்றிச் சொன்னபடி கேட்டு, சாப்பாடுமுதலியன வேண்டியமட்டும் பரிந்தளித்து வஸ்திரங்கள் முதலியன அழுக்கின்றிக் கொடுத்து வயிற்றிற்பிறந்த பெண்போல் வாஞ்சித்து, எதிர்த்து உத்தரம் பேசாமல், பொறுத்துப் புகழ்ந்து புறங்கூறு விரதம் பொருந்தி முகமலர்ந்து இனிமையுரைத்து அகமகிழ்ந்து வீட்டுவேலைக்கு மிஞ்சின வேலையில்லையாதலால் இதுவே பிரதானமென் றெண்ணி இளைப்பு, தேகவருத்தம், சோம்பல், தூக்கம், இளைப்பு, ஆயாசம், இன்பம், துன்பம் எது முதற்கொண்டும் பாராமல், இரவும் பகலும் ஏமாறுமல் என்வீட்டு வேலைகளை இன்னொருவர் கையிற் கொடாமல் என்னுல் இயன்றமாத்திரம் வீடுவாசல் திண்ணை தெருப்புறம் முதலிய இடங்களில் எச்சில் துப்பல் தூசு தும்பு குப்பை கூளமில்லாமல் விளக்கி பசுவின் சாணத்தாற் சமமாய் மெழுகி, கோலமிட்டு, வாசற்காலுக்குக் குங்குமப்பொட்டிட்டு, பூமாலை சோத்திட்டு, மாவிலை ஆர்த்திட்டு, பார்த்த பெரியோர் யாவரும் என்ன லட்சுமி வாசமாயிருக்கிறதென்று சொல்லும்படிக்குப் பரிசுத்தப்படுத்துவேன். வீண்பேச்சுகளும் பிறபேச்சுகளும்பேசேன். விருதா மனிதருடனும் உறவாடேன். வந்தவர்களைப் போகிறவர்களை உட்கார வைத்துக் கொண்டு விண்ணுணம் காட்டி, வீணுகிய டம்பங்காட்டி காலை நீட்டிக் கொண்டு கதை காரணம்பேசி, புருஷன் மாமனுர் மாமியார் பிள்ளைகள் இவர்கள் இறந்தால் அழுகிறதற்கான பாட்டை ஆராய்ந்து படித்து, இன்னும் புலந்திரன் தூது, அல்லியரசானி மாலை, நல்லதங்காள் கதை, கண்ணகிகதை இப்பேர்ப்பட்ட சில்லறைச் சரித்திரங்களைக் கேட்டு இந்நீட்டுப் பாட்டுக்கு வீட்டிலுள்ள அரிசி, மிளகு, மிளகாய், உப்பு, புளி, சாறு, சோறு, துணி மணிகளைக் கொடுத்து யாரிடத்தும சிரித்துவிளையாடி, ஓ கொடியமான வார்த்தைகளாடி, ஒருகுகொண்டை சொருகு கொண்டை போட்டு அதில் மலர்மாலை சூட்டி, அந்தக் கொண்டையைத் தன்னொத்த பெண்டுகள்தோளின்பேரிற் சாய்ந்து, உரிய ஆண்களில்லாதபோது அலங்கோலமாய்ச் சூடிப்பாடி, புகையிலை பாக்கு வெற்றிலை இவைகளை ஒருவருக்கொருவர் கொடுத்துமாற்றி ஏமாற்றி; ஊரில் புதினமென்ன, நாட்டில் புதினமென்ன, ஒருவனைவிட்டொருவனைத் தொடரும் ஏச்சுப் பேச்சு இவைகளைப் பேசிக் கொண்டு, பெருமூச்சுவிட்டுத் தூங்கி வீட்டுவேலையை வேலைக்காரர் வேலைக்காரிகள் இவர்களைப் பார்க்கச்சொல்லி, ஆக்கச்சொல்லி, சுசி முதலியவில்லாமல், பண்டம் போவதுவருவது தெரியாமல், பறுவாய்பண்ணுமல், புருஷன் முதலிய பேர்கள் வந்தால் வேலைக்காரியைக் கூவி சோறு போட்டு வட்டியென்று சொல்லி, தாங்கள் அண்டை அயல்வீட்டுக்டுக்குப் போகிற பெண்களாகிய வண்டர்களைப்போல் என்னுயிரொழிந்தாலும் என் உடலழிந்தாலும் ஒருக்காலும் இப்படிக்கெல்லாம்நடக்கமாட்டேன்.

ஓ என் பட்சமுள்ள பத்மாவதியே! இன்னுங்கேள், எனக்குத் தெய்வஸ்தலம் தேவாதிகளுலகம் குருவாச்சிரமம் மோக்ஷ வீடு இவையெல்லாம் நானிருக்குங்குடிசை தான். இதைவிட வேறேயிடம் போயறியேன் பராபரன் நம்மை இல்லறமங்கையாக ஏற்படுத்தி வீடு தேடிவந்த அதிதி பிதிர்கள் முதலானவர்களுக்கு உபசரி யென்றும், என் பத்தாவுக்கு ஊழியப் பணிவிடை புரிந்திடுதியென்றும், இல்வாழ்க்கையிலிருந்தே கடைத்தேறவேண்டுமென்று விதித்தது. ஆதலால் இந்தக் குடிசை வீட்டைக் கோகனகபுரமாயுன்னி, நமக்கு கோவில் ஸ்தலம் குளம் தர்மம் இவையெல்லாம் என் வீட்டைச் சுத்தி செய்து ஆசாரமாய் வைத்திருந்தால், அதுவே யவையெய்லாமா யிருக்குமென்றெண்ணிச் சந்தோஷமாயிருப்பேன். நான் கலியாணஞ்செய்துகொண்டு மாமியார்வீட்டுக்கு வந்தபிற்பாடு தெருவாசற்படியிற் போயறியேன். என் புருஷனும் என் பெரியோர்களுந் தவிர அயற் புருஷருடனும் பெண்களுடனும் அண்டிப் பேசியிருக்கமாட்டேன். உதயத்திற்கு முன் எழுந்து தந்தசுத்தி செய்து, தெருவாசல் வீடெல்லாந் திருத்திப் பெருக்கி மெழுகி, பாத்திரஞ் சுத்திபண்ணி வைத்து, விழுப்பாகிய பாண்டங்களைவிலக்கி ஸ்நானமாடி, நித்தியவிதி நேமம் சூரிய நமஸ்காரஞ் செய்து, ஈஸ்வரபூசை முடித்து, இஷ்ட தெய்வமாகிய நாயகனது படுக்கை வீட்டினுட் புகுந்து, அவரது நித்திரையை நீக்கி, அவருக்கு நடத்தவேண்டிய உபசாரங்களெல்லாம் குறைவில்லாது நிறைவாகச் செய்து, நாயகனெழுந்த உடனே போய் எனது மாமி மாமனுரை எழுந்திருக்கச் செய்து அவர்களுக்கு வேண்டிய பணிகளை நானும் எனது கணவனுமாகச் சோர்வின்றியற்றி, பிற்பாடு எனது கணவனுக்குப் போசனமிட்டுத் தாம்பூலங் கொடுத்து, அவர் வெளியே செல்லும்வரைக்கும் அவரை விட்டு நீங்காமல் ஆதரணை பண்ணிக் கொண்டிருப்பேன். இவ்வித உபசாரங்களெல்லாம் முடிந்து எனது கணவரும் வெளியே அலுவல் காரியத்திற்குப்போன அப்போதே நானும் புசித்து, வேலைக்காரரும் என்னைப்போற் சாப்பிடும்படியாக விசாரித்து, வீட்டு வேலைகளை யெல்லாம் நிதானித்து, எந்தெந்தச் சாமான்களில்லையோ அவைகளைச் சேகரித்து, அரைக்கணமேனும் சோம்ப லில்லாம லிருந்து, என் கணவனே தெய்வமென்று கனவிலும் மறவாமல் வழிபடுவேன். அவருடைய சொல்லுக்கு மல்லுக்கட்டி வார்த்தையாடேன்.

M. K.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதே விரதம் ஒரு கேடயமாயிருந்து என்னைக் காப்பாற்றியது. பிரமசரியத்தின் பெருஞ்சிறப்பு எனக்கு நாளுக்கு நாள் நன்கு புலனுக வந்தது போனிக்ஸில் இருந்தபோது விரதம் பூண்டேன். காயம்பட்ட போர்வீரர்களுக்கு ஊழியம் செய்யும் வேலை முடிந்ததும் போனிக்ஸுக்குச் சென்றேன். அங்கிருந்து ஜோகான்ஸ் பர்க்குப் போனேன். அங்குபோய் ஒருமாதத்திற் கெல்லாம் சத்தியாக்கிரகத்திற்கு அடிப்படைபோடப்பட்டது எனக்குத் தெரியாமலே பிரமசரிய விரதமென்னைச் சத்தியாக்கிரகத்துக்குத்தயார் செய்துவர்தது போலும். சத்தியாக்கிரகம் முன்கூட்டியே சிந்தித்து ஏற்பாடு செய்யப்பட்ட திட்டமன்று நான்சிறிதும் எண்ணுதபோது அது தானுகவே வந்ததாகும் ஆனுல் இதற்கு முன்பு நான செய்துவந்தகாரியங்களே இந்தலட்சியத்தினிடம் என்னைக் கொண்டுவந்து சேர்த்தன என்பதுந் தெளிவாயிருந்தது ஜோகான்ஸ் பார்க்கில் ஏராளமான செலவுடன் நடத்திய ஜாகையைக் கலைத்து விட்டுப் போனிக்ஸுக்குப் போனது பிரமசரிய விரதம் பூணுவதற்காகவே போலும் எனத்தோன்றியது பிரமசரிய விரதத்தைப் பூரணமாய் அனுஷ்டிப்பதே பிரம ஞானிப் பேறு என்பதைச் சாஸ்திரங்களைப்படித்து நான் தெரிந்துகொள்ளவில்லை; அனுபவத்திலிருந்து சிறிது சிறிதாக இவ்வுண்மை எனக்கு உறுதியாயிற்று.

இதைவற்புறுத்தும் சாஸ்திரங்களை நான் படித்தது பிற்காலத்திலேயேயாம். உடல், மனம், ஆன்மா, என்னும் மூன்றையும் காப்பாற்றுவது பிரமசரியமே என்னும் அறிவு எனக்கு நாளுக்குநாள் தெளிவாக விளங்கிவந்தது. ஏனெனில் இப்போது பிரமசரியம் ஒரு கனவிரதமாக இல்லை. அதுமகிழ்ச்சியும், அமைதியும், ஆறுதலும் தரும் ஓர் சாதனமாகி விட்டது. தினந்தோறும் அதனிடம் ஒவ்வொரு புதிய அழகைக்கண்டுவந்தேன்.

இவ்வாறு அதனுல்வரும் ஆனந்தம் நாளுக்கு நாள் அதிகமாகி வந்ததாயினும் அதைக்கடைப்பிடிப்பது எளிதாயிருந்தது எனயாரும் எண்ணவேண்டாம், 56-ம் வயதைக்கடந்துள்ள இப்போதும் அவ்விரதத்தைக் கடைப்பிடித்தல் எவ்வளவு கடினமானதென்பதை நான் நன்குணர்கின்றேன் அவ்விரதம் கத்திமுனையில் நடப்பதை யொத்ததென்றும் ஒவ்வொரு கணமும் விழிப்புடனிருந்து அதைக்காத்தல் வேண்டுமென்றும் ஒவ்வொரு நாளும் நன்ருய்த் தெளிவாகிவருகின்றது.

பிரமசரிய விரதங்காப்பதற்கு முதலாவது இன்றியமையாத நிபந்தனை சுவைப் புலனடக்கமாகும். சுவைப்புலனை அடக்கிவந்தால் பிரமசரியங் காப்பது எளிதாவதைக்கண்டேன். எனவே சைவ உணவுக்காரனுக.

மட்டுமன்றி, பிரமசாரியென்னும் முறையிலும் இப்போது உணவுப்பரி சோதனைகள் நடத்தத் தொடங்கினேன். இச்சோதனைகளின் பயனுக பிரமசாரியின் உணவு அளவுக்குட்பட்டதாயும். எளியதாயும், மசாலை, தாளிப்பு முதலியவைகள் இல்லாததாயும் இருக்க வேண்டுமெனக்கண்டேன்.

### பிரமசாரிக்குத் தகுந்த உணவு

ஆறு ஆண்டுசோதனை நடத்தியதன்பலனுக, பிரமசாரிக்குத்தகுந்த உணவுபுதிய பழங்களும், கொட்டைப்பருப்புவகைகளுமே, என்னும் முடிவுக்குவந்துள்ளேன். இந்த உணவுமட்டும் அருந்திக்கொண்டிருந்தபோது சிற்றின்ப இச்சையை அறவே ஒழித்தவனுயிருந்தது போல் வேறு உணவு அருந்தியபோது இருக்க முடியவேயில்லை. பழங்கள் கொட்டைகள் மட்டும் அருந்திக் கொண்டிருந்த பொழுது பிரமசரிய விரதங்காக்க என்னுடைய முயற்சி தேவையில்லாமலே இருந்தது. பால் அருந்தத்தொடங்கியபின்னர் இதற்குப் பெருமுயற்சி தேவையாயிருந்து வந்திருக்கிறது. பழ உணவை விட்டுப் பால் உணவு அருந்துதல் எப்படி அவசியமாயிற்று என்பது குறித்துப் பின்னர் எழுதுவேன், பால் உணவு பிரமசரிய விரதங்காத்தலைப் பெருதுங் கஸ்டமாக்கிவிடுகிறது என்று கூறுவதே இங்குப் போதுமானது. இவ்விஷயத்தில எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

இதிலிருந்து பிரமசாரிகள் எல்லோரும் பாலைத்தள்ளி விடவேண்டு மென்று யாரும் முடிவு செய்து விடவேண்டாம், அநேக சோதனைகள் செய்தபிறகே, பிரமசரிய விரதத்திற்கும் உணவு வகைகளுக்கும் உள்ள தொடர்பை நிச்சயிக்கலாம். பாலைப் போல் உடம்பை வளர்க்கக் கூடியதும் எளிதில் செமிக்கக் கூடியதுமான பழத்தை நான் இன்னும் கண்டுபிடித்தேனில்லை டாக்டர்கள், வயித்தியர்கள், கக்கிம்கம் எவ்வளவோ பேரைக் கேட்டும் பயனில்லை. எனவே, பால் ஓரளவு கிளர்ச்சிதரக் கூடியதென்று அறிந்துள்ளேனுயினும் தற்போது அதைவிலக்கி விடும்படி நான் யாருக்கும் யோசனை கூறமாட்டேன்.

### உபவாசம் ஒரு துணை.

பிரமசரியத்திற்கு வெளி உதவிகளுள் உபவாசமும் ஒன்று. உணவு வகைகளை ஆராய்ந்து தெரிந் தெடுத்தால் எவ்வளவு அவசியமோ அவ்வளவு உபவாசமும் அவசியமானது. புலன்கள் கட்டுக்கடங்காது ஓடும் இயல்பின. எல்லாப் புறங்களினும், மேலும் கீழும் சுற்றியும் வேலி எடுத்துத் தடுத்தாலன்றி அவற்றை அடக்கிவைத்தல் இயலாது. உணவில்லா விடில் புலன்கள் வலியிழந்து விடுகின்றன என்பது அனைவரும் அறிந்த தொன்று, எனவேபுலனடக்க முயற்சிக்குத் துணையாக,

உபவாசத்தைக் கைக்கொள்ளல் பயனுள்ள தென்பதில் ஐயமில்லை ஆனுல் சிலர் விஷயத்தில் உபவாசம் பயன்படாது. உபவாசத்தினுல் மட்டுமே புலனடக்கம் கைகூடுமென வைத்துக் கொண்டாலும்; அவர்கள் உடலை உணவில்லாமல் வைத்துக கொள்ளுகிருர்களேயன்றி உள்ளத்திற்கு விருந்தளித்தவண்ணமிருக்கிருர்கள். அதாவது, உபவாசம் முடிந்ததும் இன்னின்ன இனிய உணவு வகைகளை அருந்துவது என்பது குறித்துச் சிந்தித்த வண்ணமாயிருக்கிருர்கள். இத்தகைய உபவாசம் அவர்களுடைய வைம்புலனடக்கத்துக்கோ; காமத்தைத் தவிர்ப்பதற்கோ துணையாயிராதென்பது நிச்சயம். பட்டினிகிடக்கும் உடம்புடன் மனமும் உத்துழைக்கும் ஒத்துழைக்கும் போதுதான் உபவாசத்தினுல் பயனுண்டு. அதாவது உடம்புக்கு இல்லையென மறுக்கும் பொருள்களை உள்ளம் வெறுக்கவேண்டும். சிற்றின்ப ஆசைகளுக்கெல்லாம் மூலவேர் மனமேயாகும் ஆதலின் உபவாசம் புலனடக்கத்துக்கு ஓரளவே துணைசெய்யும். பட்டினிகிடக்கும் மனிதன் ஒருவன் காமக்குரோதங்களுக்கு வயப்பட்டிருத்தல் கூடுமானதே. ஆனுல் உபவாச விரதமில்லாமல் காமத்துக்கு அழிவில்லையென்பதும் உண்மை. எனவே பிரமசரிய விரதத்துக்கு உபவாச மின்றியமையாத தென்றும். ஆனுல் அதற்கு உபவாசம் மட்டும் போதாதென்றும் ஏற்படுகின்றன பிரமசரிய விரதம் அனுஷ்டிக்க விரும்புவோரில் பலர் தவறிவிடுவதற்குக்காரணம் அவர்கள் தங்கள் பிறபுலன்களைக் கட்டுப்படுத்துவதில் கவலைகாட்டாததேயாம் வெயில்தகிக்கும் வேனிற்காலத்தில் மாரிகாலக்குளிரை அனுபவிக்க விரும்புவோனுடைய முயற்சியே அவர்களுடைய முயற்சியொக்கும். பிரமசாரியின் வாழ்வுநெறி மற்றவர்களுடைய வாழ்வு நெறியிலிருந்து முற்றிலும் அகனறதாயிருத்தல் வேண்டும் இவ்வித்தியாசம் சூரியனுடைய ஒளியைப்போல் நன்கு விளங்குவதாயிருக்கும். பிரமசாரியின் வாழ்வுக்கும் மற்றவர்களுடைய வாழ்வுக்கும் வெளிப்படையான ஒற்றுமைமட்டுமே இருக்கமுடியும். இருவரும் கட்புலனைப் பயன்படுத்துகிருர்கள். ஆனுல் பிரமசாரி ஆணடவன் மகிமையைப் பார்ப்பதற்கே அதைப்பயன்படுத்து கிருன். மற்றவனே தன்னைச் சுற்றிலுமுள்ள வேடிக்கை விநோதங்களைப் பார்ப்பதற்கு அதை உபயோகிக்கிருன். இருவரும் செவியினுல் கேட்கிருர்கள் ஆனுல் பிரமசாரி ஆண்டவன் புகழைத் தவிர வேறெதையும் கேட்பதில்லை. மற்றவன் செவியிலோ கேலிப் பேச்சுகளே வீழுகின்றன.

இருவரும் இரவில் நீண்டநேரம் கண்விழிக்கிருர்கள். ஒருவன் பிரார்த்தனையில் அந்நேரத்தைக் கழிக்கின்ருன் மற்றவன் பயனற்ற களியாட்டத்தில் காலங்கழிக்கிருன். இருவரும் அந்தராத்மாவுக்கு உணவளிக்கிருர்கள். ஆனுல் ஒருவன் ஆண்டவன் திருக்கோயிலைச் செப்பனிட்டுப் பாதுகாக்க மட்டுமே உணவளிக்கிருன். மற்றவனே கண்டதையெல்லால் திணித்து அததூய திருக்கோயிலை நாற்றமுள்ள சாக்கடையாக்கி விடுகிருன். இவ்வாறு அவ்விருவரும் வடதுருவத்தையும் தென்துருவத்தையும்போல் அகன்றுள்ள வாழ்க்கை நடத்துகிருர்கள். நாளாக ஆக இருவருக்குமிடையே தூரம் அதிகமாகுமே யன்றிக் குறையாது.

மனம் வாக்குக்காயங்களினுல் புலனடக்கம் பெறுதலே உண்மைப் பிரமசரியமாகும். மேலே நான் குறிப்பிட்டது போன்ற கட்டுப்பாடுகளின் அவசியத்தை ஒவ்வொருநாளும் நான் நன்கறிந்துவருகிறேன். துறவும் பிரம்மசரியமும் வரையறைக் குட்படாத பெருமையுடையனவாகும். எனவே அத்தகைய பிரமசரியம் வரையறைக்குட்பட்ட முயற்சியினுல் இலட்சியமாகமட்டுமே இருக்க முடியும் பிரமசரியத்தைக் கடைப்பிடிக்க விரும்புவோன் ஒருவன் எப்போதும் தன்குறைகளை உணர்ந்தவனுயிருப்பான் தன் இருதய அந்தரங்கத்தின் மூலை முடுக்குகளையும் சோதித்து அங்குள்ள சிற்றின்ப ஆசைகளைக் கண்டுபிடித்து அவற்றைத் துரத்த ஓயாது முயல்வான் எண்ணங்கள் முற்றிலும் வாய்ப்பட்டாலன்றிப் பூரண பிரமசரியம் கைகூடுதல் இயலாத தொன்று. எண்ணங்களை அடக்குதல் மனதை அடக்குவதாகும். மனதை அடக்குதலோ காற்றை அடக்குதலினும் கடினமானது. ஆயினும், உள்ளத்தினுள்ளே இறைவன் இருப்பதால் அம்மனத்தை அடக்குதலும் சாத்தியமாகிறது. கடினமாயிருப்பதால் சாத்தியமே யில்லையென்று யாரும் எண்ணவேண்டாம். பிரமசரியம் மிக உயரிய லட்சியமாகும் எனவே அதையடையவும் உயரியமுயற்சி தேவையாயிருப்பதில் வியப்பில்லை.

ஆனுல் இந்தியாவுக்கு வந்தபின்னரே மனித முயறசியால் மட்டும் பிரமசரியத்தைப் பூரணமாய் அனுஷ்டிக்க முடியாதென்று எனக்குத் தெரியவந்தது. அதுவரையில், சிற்றின்ப ஆசையை அறவேயொழிப்பதற்குப் பழ உணவு உட்கொள்வதொன்றே போதுமென்று தவருக எண்ணி இனிச்செய்ய வேண்டிவதொன்றுமேயில்லை யென்று இழுமாந்திருந்தேன்.

என் போராட்டங்களைப்பற்றி இப்போது கூறி, இனி வரப்போகும் அத்தியாயங்களில் சுவையைக்கொடுக்க விரும்ப வில்லையாதலின் மேலே சொல்கிறேன். இறைவன்திருவடியை அடையவேண்டுமென்னும் நோக்கத்துடன் பிரமசரியத்தைக் கடைப்பிடிக்க விரும்புவோர் அதுதங்களால் ஆகாதோவெனச் சோர்வடையவேண்டாமென்றுமட்டும் இங்கே கூறுவேன்.

ஆனுல் அவர்கள் தங்கள் சுயமுயற்சியில் எவ்வளவு நம்பிக்கைவைத் திருக்கிருர்களோ அவ்வளவு ஆண்டவனிடமும் நம்பிக்கை உள்ளவர்களாயிருக்க வேண்டும்

மிதபோஜன முள்ளவனிட மிருந்து புலனுக்கின்பந்தரும் பொருள்கள் தங்கள் ரஸத்தை மட்டும் விட்டு ஓடிப் போகின்றன. இறைவன் அருள் கூடும்போது அந்த ரஸமும் மறைந்து விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. எனவேமோட்சத்தை நாடுவோனுககு இறைவன் நாமமும் அருளுமே கடைசியான சாதனங்களாகும். நான் இந்தியாவுக்கு வந்தபின்னரே இவ்வுண்மை எனக்குப் புலனுயிற்று.

Published by P. A. Krishnan for and on behalf of the Jaffna depressed classes Association Chunnakam published at the Saiva Pragasa Press, Vannarponnai, Jaffna.